விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 08 வியாழக்கிழமை (20.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ராஜீவ் கொலைக் கைதிகள் அனைவரும் விடுதலை!

## தமிழக அரசு அதிரடித் தீர்மானம் ; மத்திய அரசிற்கு அவகாசம்


முருகன் | நளினி | பேரறிவாளன் | சாந்தன் | ரவி | றொபேட் பயஸ் | ஜெயக்குமார்

(சென்னை)

ராஜீவ் காந்திகொலை தொடர்பில் சிறைவாசம் அனுபவித்துவரும் கைதிகள் 7 பேரையும் விடுதலை செய்வதற்கு தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இவர்கள் 7 பேரும் நீண்டகாலம் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டபடியால் அவர்களை விடுதலை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மத்திய அரசின் முடிவுக்காக மாநில அரசின் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## மனித புதைகுழி 70 ஆனது

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழியில் இருந்து நேற்று புதன்கிழமை மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இது வரை மீட்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை70 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர டி.எல். வைத்தியரெட்ண தலைமையில் 26-வது தடவையாக நேற்று குறித்த மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. இதன் போது மேலும் 3 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அடையாளம் காணப பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளில் மேலும் 4 எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதவானின் உத்தரவிற்கமை வாக மன்னார் 19 ஆம் பக்கம் பார்க்க..

## ராஜீவ்காந்தியின் கொலைக் கைதிகளின் விடுதலைக்கு காங்கிரஸ் எதிர்ப்பு



(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜவ் காந்தியின் கொலை வழக்கில் கடந்த 23 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வரும் சாந்தன், முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு எடுத்த முடிவிற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ராஜீவ் காந்தி கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த மூவரின் தண்டனையையும்ஆயுள்தண்டனையாக குறைத்து நேற்று முனதினம் செவ்வாய்க்கிழமை இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனைத் தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன், 20 ஆம் பக்கம் பார்க்க..



## 25 வருடங்களாக மகனை பார்க்கவில்லை

### உடுப்பிட்டியிலிருக்கும் சாந்தனின் தாயார் ஆவல்



(சென்னை)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ள ஒருவரான சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி தனது மகனை கடந்த 25 ஆண்டுகளாகப் பார்க்கவில்லை எனறும், அவரை உடனடியாக பார்க்க விரும்புவதாகவும் அதற்கு பொருளாதார நிலைமை மோசமாகவுள்ளதாகவும் தெரிவித்தார். தான் தனது மகனை பெற்றெடுத்தபோது ஏற்பட்ட ஆனந்தத்தை விட இப்போது அதிக ஆனந்தம் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். தமது மகனின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்த நீதிபதிகள் மற்றும் அதற்காக போராடியவர்கள் 19 ஆம் பக்கம் பார்க்க..

## ஜெயலலிதா அறிவிப்பு காங்கிரஸ் வெளிநடப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு தமிழக முதல்வர் அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டப்பேரவையில் இருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். ராஜீவ் 19 ஆம் பக்கம் பார்க்க..

## ஈழத்தமிழர் விடுதலை முதலமைச்சர் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து ஈழத்தமிழர்கள் விடுவிக்கப் பட்டுள்ளமையை வரவேற்றுள்ள வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சிவி 20 ஆம் பக்கம் பார்க்க..

## ஐ.நா. அமர்வில் சர்வதேச விசாரணை கமரூனின் நடவடிக்கை தொடரும்!

### பிரிட்டன் தூதுவர் உறுதிபடத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் மீது ஐ.நா. அமர்வில் சர்வதேச விசாரணையை கோருவதற்குரிய நடவடிக்கையை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த அந்நாட்டுத்தூதுவர் ஜோன் ரங்கின் முதலமைச்சரிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பிரிட்டிஷ் நாட்டின் தூதுவர் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை யாழ். கோவில வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களின் கேள்விக்கு முதலமைச்சர் பதிலளித்திருந்தார். இதன் போது இலங்கை அரசாங்கத்திற்கு 20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிச் சந்தேக நபர்களின் விபரக் கோப்பு தயாரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் தகவல்கள் அடங்கிய கோப்பு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கைதிகளின் பெயர், அவர்கள் மாற்றப்பட்ட இடம் மற்றும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல்கள் இந்த கோப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கைதிகளின் நெருங்கிய உறவினர்கள், கொழும்பு, வவுனியா மற்றும் பூசா ஆகிய இடங்களில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவினரிடம் இந்த தகவல்களை பெற முடியும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 ஆயிரம் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் தகவல்கள் கோப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கைதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு கருதி தகவல்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் பொது மக்களுக்கு அந்த தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

கைதிகளின் காணிகள், சட்டம், அமைதி, நிர்வாகம், மொழி, சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைத்திருந்தது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் தேசிய திட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. (எ-11)


விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை, வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

*வெளிவாரிப் பரீட்சைகள் – 2011*

**1. கலைமுதற் தேர்வு – 2011 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 03.03.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் 22.03.2014 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 26.02.2014 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
19.02.2014 (சி-6548)


## காணி/ வீடு விற்பனைக்கு

காணி/ வீடு விற்பனைக்கு

**கொக்குவில்**
கொக்குவிலில் 2 பரப்பு காணி சகல வசதிகளுடனும் கூடிய வீட்டுடன் (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.
(A/001)

காணி/ வீடு விற்பனைக்கு

**சங்கானை**
சங்கானை பிரதான வீதியில் 5 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(A/002)

காணி/ வீடு விற்பனைக்கு

**கோண்டாவில்**
கோண்டாவில் (வடக்கு) இல்9 பரப்பு 6.94 குளிகாணி சகல வசதிகளுடன் கூடிய வீடு (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.
(A/003)

காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 8 குளி காணி (கிணறு , பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு.
(A/004)

காணி விற்பனைக்கு

**கொடிகாமம்**
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை, மா, பனைகளுடன்) உடன் விற்பனைக்கு.
(A/005)

காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் (பருத்தித்துறை, நாவலர் வீதிக்கு சமீபமாக) 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு.
(A/006)

காணி/ வீடு தேவை

**நல்லூர்**
நல்லூர், கந்தர்மடம், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் காணி/ வீடு விற்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(B/001)

**றியல் எஸ்ரேற்**
இல.50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளை யார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30, 1.30- 5.00 மணிவரை
வெள்ளிக்கிழமை விடுமுறை.


## தவறிவிட்டது

கெருடாவில் தெற்கு தொண்டைமானாற்றைச் சேர்ந்த இரத்தினசிங்கம் இளஞ்செழியன் என்பவருடைய 913334833V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையானது மருதனார்மடத்திற்கும், இணுவிலுக்கும் இடைப்பட்ட இடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (இ

**0771631730**

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்பிரதம விருந்தினராக மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர்எஸ். ஓங்காரமூர்த்தி கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு வித்தியானந்தகல்லூரியின்விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.வேதநாயகம் கலந்து கொள்கிறார் (கு)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகமணி சிந்தாமணி

மானிப்பாய் உடுவிலைப் பிறப்பிடமாகவும் மணல்தறை ஒழுங்கை கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமணி சிந்தாமணி அவர்கள் 19.02.2014 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரேசு நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சரஸ்வதி (மலர்), சரோஜினி (எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்), சண்முகானந்தம் (விக்கி–கனடா), வசந்தகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணநாதன் (குணம்), ஜெயபாலசிங்கம் (இயக்குநர்– எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்), தயாநிதி (கனடா), கிருபா (பிரான்ஸ்), உதயகுமார் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கலாநிதி மைதிலி (சிரேஷ்ட உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), வைதேகி (பிரான்ஸ்), ஜானகி (அவுஸ்திரேலியா), சிந்துஜா (STEPS Institute), மாருதி, திரோஜன் (பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜனுஷன், கௌசல்யா (கனடா), தனுசிகன் (கனடா), நித்தியவாணி (பிரான்ஸ்), அபிராமி (பிரான்ஸ்), வைஷ்ணவி, பேராசிரியர் விசாகரூபன், தேவதாசன், சிவானந்தன், அஜந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷ்மா, தேஜா, சண்முகன், வேணுஜன், தரணியா, சாயகி, சாருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் குறித்த விபரம் பின்னர் அறியத் தரப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்களை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

**தகவல்:**
**திரு.நா.சண்முகானந்தம் (விக்கி - கனடா)**
**இல.393/23, கோவில் வீதி, நல்லூர்.**
**தொலைபேசி - 021 221 9133** (5644)

## கோவிற்கடவை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகோற்சவ விஞ்ஞாபனம்

காலம்:–20.02.2014 வியாழன் காலை 10 மணிக்கு கொடியேற்றம்
சப்பறம்:–28.02.2014 வெள்ளி அதிகாலை 3.00 மணி
தேர்:–28.02.2014 வெள்ளி மாலை 2 மணி
தீர்த்தம்:–01.03.2014 சனி பகல் 12 மணி

மகோற்சவ குரு: சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் அகில இலங்கை சமாதான நீதவான் சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார் B.A (Hons)M.A

விஷேட மேளக் கச்சேரி:– காஞ்சிகாமகோடி பீட ஆஸ்தான வித்வான் சுருதி ஞான வித்வமணி T.V.P ராஜேந்திரன் குழுவினர் இந்தியா திருப்பாதிரிப்புலியூர்

(சி-6547)

தொடர் சொற்பொழிவு விடயம் "விநாயகர் புராணம்" வழங்குபவர் பிரசங்க வாரிதி நாகரட்ண கலாதர சிவாச்சாரியார்

இவ்வண்ணம் கொடியேற்ற திருவிழா உபயகாரர் பரம்பரை பூசகர் ஆறுமுக கணேசக் குருக்கள் குடும்பம்

## மாபெரும் விளையாட்டுப்போட்டிகள்

வட மாகாண விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் முகமாக, கனடாவில் காலமாகிய தொழிலதிபர் அமரர்.பொ.அப்புத்துரை அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவையொட்டி நடாத்தப்படும் மாபெரும் போட்டிகள்

| போட்டிகள் | நுழைவுக் கட்டணம் |
|---|---|
| கிரிக்கெட் | 15000.00 |
| உதைபந்தாட்டம் | 15000.00 |
| கரப்பந்து | 10000.00 |
| சதுரங்கம் | 3000.00 |

ஒவ்வொரு விளையாட்டிலும் வெற்றி பெறும் அணியின் ஆட்டநாயகர்கள் வெளிநாட்டு சுற்றுலா சென்று வரும் அரியவாய்ப்பினை தட்டிச் செல்லுங்கள். (நிபந்தனைக்குட்பட்டது)

தங்களுக்கு வழங்கப்படும் உணவு, மருத்துவ செலவுகள் மற்றும் தங்களின் இதர தேவைகளுக்காக நுழைவுக்கட்டணங்கள் பயன்படுத்தப்படும். விண்ணப்பங்கள் [illegible] முடிவுத்திகதி 28.02.2014

மேலதிக விபரங்களுக்கு : 0772415200, 0778928501 (5641) [illegible] விளையாட்டுக் கழகத்தினர்.


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6545)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆசிரியர்

ஆசிரியர் பணி என்பது மிகச் சிறப்பானது. சாதாரண மாண வர்களுக்குக் கூட உந்து சக்தியைக் கொடுத்து அவர்க ளையும் உயர்ந்தவர்களாக மாற்றுகிற அற்புதமான ஆற்றல் ஆசிரியர் ளுக்கு உண்டு.

ஆனால், இந்தப் பணியில் அவர்கள் சந்திக்கிற சவால் என்ன வென்றால் எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பின்னணி இருக்கும். ஒவ்வொரு வகையான அறிவுத் திறன் இருக்கும். இதையெல் லாம் புரிந்து கொண்டு அந்தந்த மாணவர்களுக்கேற்ப கல்வியை அவர் சொல்லிக் கொடுத்தால் மாணவர்கள் எளிதில் வெற்றி பெறுவர்.

பொதுவாக, சில ஆசிரியர்கள் மாணவர்களைப்பார்த்து "மா" "மண்" என்றெல்லாம் சொல்வதுண்டு. ஏனென்றால் அந்தளவுக்கு மாணவர்களில் சிலர் இருப்பார்கள். ஆனால் பவணந்திய முனிவர் என்பவர் தன்னுடைய நன்னூலில் இந்தச் சொற்களுக்கெல்லாம் ஒரு புதிய விளக்கம் சொல்கிறார். மாடு போலவும் மண் போலவும் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் சிறந்த மாணவர்களாக இருக்கிறார்கள் என்று அவர் விளக்கம் அளிக்கிறார்.

இது ஒரு வித்தியாசமான அணுகுமுறையாக இருக்கிறது இல்லையா?

அதாவது மாணவர்களின் கேட்கும் தன்மையை வைத்து மாணவர்களை முதல், இடை, கடை என்று மூன்று வகையாக பவணந்திய முனிவர் பிரிக்கிறார்.

இதில், அன்னத்தையும் பசுவையும் போல இருப்பவர்கள் முதல் தர மாணவர்கள். அன்னம் என்ன செய்யும்? பாலையும் நீரையும் தனித்தனியாகப் பிரித்து பாலை மட்டும் குடிக்கும். அது போல நல்லதையும் கெட்டதையும் பகுத்து அறிந்து நல்லதை மட்டுமே ஏற்றுக் கொள்கிற குணம் சில மாணவர்களுக்கு இயல் பிலேயே உண்டு.

பசுவானது புல் நிறைய இருக்கிற இடத்தில் வேகமாக மேயும். மேய்ந்த பின், ஓரிடத்தில் நின்றோ, படுத்தோ தான் மேய்ந்தவற்றை எல்லாம் நன்கு அசைபோட்டு ஜீரணத்துக்கு அனுப்பும். அது போல் சில மாணவர்கள் கேட்கும் போது நிறைய செய்திகளை கேட்டுக் கொள்வார்கள். பின்பு அதை அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து அசை போட்டு சிந்தித்து ஆழமாக மனதில் பதிய வைத்துக் கொள்வார்கள். இதெல்லாம் முதல் தர மாணவர்களுடைய இயல்பாகும்.

மண், கிளி இதுமாதிரி இருக்கிற மாணவர்கள் இடைநிலை மாணவர்கள். மண் என்ன செய்யும்? உழவர்கள் எந்த அளவுக்கு பாடுபடுகிறார்களோ அந்தளவுக்கு பலன் கொடுக்கும். அதே போல்தான் ஆசிரியர் எந்தளவுக்கு கஷ்டப்பட்டு சொல்லிக் கொடுக் கிறாரோ, அந்தளவுக்கு சில மாணவர்கள் நன்றாக படிப் பார்கள். கிளி மாணவர்கள் சிலர் இருப்பார்கள். தங்களுக்குக் கற்பிக்கப்பட்டது என்னவோ அவற்றை மட்டுமே திரும்பத் திரும்ப அவர்களால் சொல்ல முடியும்.

இரண்டாம் நிலை மாணவர்கள் இப்படி என்றால், மூன்றாவது நிலை மாணவர்கள் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, ஜல்லடை இது மாதிரி இருப்பார்கள். ஓட்டைக் குடம் என்ன செய்யும்? ஊற்றுகிற தண்ணீரை ஒழுக விட்டுவிடும். தண்ணீரை தன்னுள் அது தேக்கி வைக்காது. இதுபோல கடைநிலை மாணவர்கள் கற்றுக் கொடுப்பதை நினைவில் தேக்கி வைக்காமல் அப்படியே மறந்து விடுவார்கள்.

ஆடு எப்படிப்பட்டது தெரியுமா? அதிக தழை இருக்கும் இடத்தில் நின்று ஒரே இடத்தில் சாப்பிட்டு வயிற்றை நிறைக்கலாம் என்று ஒருபோதும் நினைக்காது. இன்னும் சற்று தள்ளி வேறொரு இடத்தில் உள்ள பசுமையான தழையைப் பார்த்தால் உடனே அங்கு தாவி விடும்.

இப்படி இடத்துக்கும் இடம் தாவி, கடைசி வரை முழுமையாக சாப்பிடவே சாப்பிடாது. அதுபோல சில மாணவர்கள் ஒரு குறிப் பிட்ட பாடத்தை ஆழ்ந்து கற்காமல் பல பாடங்களையும் மேலோட் டமாகவே கற்பார்கள்.

எருமை இருக்கிறதே அது குளத்து நீரை ஒரு கலக்கு கலக் கித்தான் குடிக்கும். அந்த மாதிரி சில மாணவர்கள் ஆசிரியர்கள் படாதபாடு படுத்தித்தான் பாடம் கேட்பார்கள்.

ஜல்லடை என்ன செய்யும் என்றால், நல்லதையெல்லாம் கீழே விட்டு விட்டு, மோசமானதை மட்டுமே தன்னுடன் வைத்துக் கொள்ளும். சில மாணவர்கள் நிலையும் இப்படித்தான். நல்லதை விட்டு விடுவார்கள். கெட்டதை மட்டும் பிடித்துக் கொள்வார்கள்.

இப்படி பல வகையான மாணவர்கள் இருக்கிறார்கள். அவர் களுடைய தராதரத்தைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கேற்ப பாடம் சொல்லிக் கொடுத்தால் தான் ஆசிரியப்பணியை உண்மையில் சிறப்பாக செய்ய முடியும் என்று பவணந்திய முனிவர் ஆலோசனை சொல்கிறார். அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குத்தான் மாணவர்கள் மரியாதை கொடுப்பார்கள். பயப்படுவார்கள் என்பது அவரது கருத்து.

ஒரு வகுப்பில் என்ன நடக்கிறது என்று பார்த்தீர்களானால், ஆசிரியர் அட்டன்டென்ஸ் எடுக்கிறார். ஒவ்வொருவருமாக "உள்ளேன் சேர்" என்று சொல்கிறார்கள். வராத மாணவர்களுக்காக சில மாண வர்கள் தங்கள் குரலை மாற்றி "உள்ளேன் சேர், உள்ளேன்சேர்" என்று அட்டென்டென்ஸ் கொடுக்கிறார்கள். இவர்கள் செய்கிற தவறு ஆசிரியருக்குத் தெரியாது என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆசிரியர் கடைசியில் "பாலுசாமி" என்றொரு பெயரை வாசித்தார். அவனுக்கு அட்டென்டென்ஸ் சொல்ல யாரும் இல்லை. உடனே ஆசிரியர் "பாலுசாமிக்கு 'உள்ளேன் சேர்' சொல்வதற்கு நண்பன் இல்லையா?" என்றார். மாணவர்களுக்கு எல்லாம் புரிந்து விட்டது. தாங்கள் பிழை செய்ததையெல்லாம் ஆசிரியர் அவதானித்துக் கொண்டு தான் இருக்கிறார் என்று. இந்த ரக மாணவர்களை இப்படித்தானே திருத்த முடியும்!

*இளசை சுந்தரம்*

# நாட்டை பிரிப்பதற்கு அல்ல; அதிகாரத்தை பகிர்ந்தளிக்குமாறே கோருகின்றோம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மாகாணசபை நிர்வாகம் தொடர்பில் ஜனாதிபதி ஏற்கனவே அளித்துள்ள வாக்குறுதிகளை நிறை வேற்றவில்லை என வட மாகாண முதல மைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரி வித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் பிபிசி செய்தியாளருக்கு வழங்கிய செவ்வி யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார் அவர்மேலும் தெரிவிக்கையில்

உள்நாட்டில் தீர்வு கிடைக்காத பட்சத்திலேயே தமிழர்கள் சர்வதேச சமூகத்திடம் தீர்வுகேட்டு நிற்கிறார்கள்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நட ந்துள்ளதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இல்லாதபோது, அது தொடர்பில் சர்வ தேச விசாரணை கோருவதில் என்ன தவறு. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மாகாணசபைக்கு கொடுத் துள்ள வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை.

எங்களோடு (ஜனாதிபதி) பேச்சு வார்த்தை நடத்துகின்றபோது, எங்க ளுக்கு பலவற்றைத் தருவதாக வாக் குறுதி அளித்தார். ஆனால் எங்க ளுக்கு கடைசியில் எதுவுமே கிடைக் கவில்லை. எங்களோடு, நல்லபடியாக, அழகாக பேசினார். ஆனால் எதனை யுமே இதுவரை வழங்கவில்லை.

வடக்கு மாகாணசபையின் நிர் வாகம் தொடர்பில் ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி பிபிசி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த விக்னேஸ்வரன், இறுதிக் கட்டப் போரின்போது, என்னென்ன போர்க்குற்றங்கள் நடந்தன என்பதை அறிவதற்காக அரசாங்கம் முயற்சிக்க வில்லை.

### வினை விதைத்தவர்கள் வினை அறுப்பர்

இறுதிக்கட்டப் போர் பிரதேசத்துக்குள் இருந்து வெளியில் வந்த மக்களுக்கு, அங்கு என்னவெல்லாம் நடந்தன என்பது தெரியும். அதுபற்றி முழுமை யாக விசாரணை நடத்தி உண்மை என்ன என்று தெரிந்து கொள்ளாமல், எமது அரசாங்கம் அப்படி ஒன்றும் நட க்கவில்லை. எமது இராணுவத்தினர் நல்லவர்கள் என்று சொல்லி வந்தா லும் உண்மை என்பது ஒரு போதும் இல்லை என்று ஆகமுடியாது தானே.

தமது உறவுகளுக்கு என்ன நட ந்தது என்பதை தெரிந்துகொள்வதற் கான உரிமை, வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளது.

இறுதிக் கட்டப் போரின் போது என்ன நடந்தது என்பது அங்கிருந்து வந்த மக்களுக்குத் தெரியும். உண் மையை அறிந்துகொள்ள வேண்டும். எவராவது குற்றம் புரிந்திருந்தால் அவர் களுக்குத் தண்டனைகிடைக்கவேண்டும் **வினை விதைத்தவன் வினை அறுப பான்.** என்ற அர்த்தப்பட சிங்களப் பழ மொழி ஒன்றையும் கூறிக் காட்டினார்.

வடக்கில் நிலை கொண்டுள்ள இரா ணுவத்தினரின் எண்ணிக் கையை குறைக்க வேண் டும் என்ற தமது கோரிக் கையும் இன்னும் நிறை வேற்றப்படவில்லை. வட க்கில் உள்ள இராணுவ சிப்பாய்களின் எண்ணி க்கை தொடர்பில் ஜனாதிப தியும் ஜனாதிபதியின் செய லாளரும் ஆளாளுக்கு முர ண்பட்ட தகவல்களைக் கூறுகின்றனர்.

இங்கு இராணுவத்தினர் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் இருக்கிறார்கள என்று நாங்கள் கூறுகின்றோம். ஆனால் எமது ஜனாதிபதியோ யாழ்ப்பாணத்துக்கு வந்து 12 ஆயிரம்பேர் தான் இருக் கிறார்கள் என்கிறார். அதற்கு மறுநாளே, ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீர துங்க 70 ஆயிரம் பேர் இருக் கிறார்கள் என்றார்.

மக்களின் காணிப் பிர தேசங்களை எல்லாம் இரா ணுவம் எடுத்துக் கொண்டு காய்கறி பயிர் செய்கிறது. மீன் படியிலும் இராணுவத்தி னர் தலையிடுகின்றனர்.

எங்கள் மக்களுக்கு அவ ர்கள் இடமளிப்பதில்லை. ஏ 9 வீதியில் போய் பார்க்கும் போது, கடைகளை வைத் திருப்பவர்கள் யார் என் றால் இராணுவத்தினர் அல்லது இராணுவத்தின் உறவினர்கள் அல்லது அவர் களின் நண்பர்கள். வடக்கு மாகாணம் முழுமையாக இராணுவத்தின் அதிகாரத் துக்குக்கீழ் இருக்கும் போது, நாங்கள் எப்படி எங்களின் வேலைகளை முன்னெடுத்துச் செல்வது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தற்போது செயற்படு கின்ற விதம் குறித்து பெரும்பான்மை சிங்கள மக்கள் சரியாக புரிந்துகொள் ளாமல் இருக்கின்றனர்.

நாட்டை பிரிப்பதற்காக அல்ல, அதி காரத்தை பகிர்ந்தளிக்குமாறே நாங்கள் கேட்டுவருகின்றோம். அரசாங்கத்திட மிருந்து தமிழ் மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில், அந்தப் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திடம் கொண்டு சென்று தீர்வு காண்பதைத் தவிர வேறு வழியில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 120 |
| தக்காளி | 20 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 60-80 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 40 |
| பயற்றங்காய் | 80 | 150 | 80 |
| லீக்ஸ் | 60 | 90 | 80 |
| பீற்றூட் | 30 | 70 | 50 |
| கறிமிளகாய் | 70 | 150 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 400 |
| போஞ்சி | 40 | 80 | 60 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 10 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

# இராசி பலன்

20.02.2014
(மாசி 08, வியாழக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 9.42 மணிவரை
சித்திரை முற்பகல் 8.26 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிக்கு
சுபநேரம் 8-02-9.32 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** பொன்னான நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள்.

**இடபம்** சந்தித்தவர்களால் சந்தோசங்கள் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்** உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்** பெற்றோரின் பாசமழையில் நனையும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**கன்னி** பணியாளரின் தொல்லை அகலும், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்** உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படும் சூழ்நிலை உருவாகலாம், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்** செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு, அந்நிய தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தொலைபேசித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும்.

**மீனம்** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய 8 ஆவது பொதுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி. தென்மேற்கு செயலகப் பிரிவுச் சங்கத்தின் 8 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் தலைவர் எம்.எக்ஸ் சர்வானந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் சு. முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்கு உதவி பிரதேச செயலாளர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக கணக் காளர் ஞா.லோகநாதன், யாழ். மாவட்ட ப.சே.ஓ.ந. நிதியத் தலைவர் வி.சிறிசக்திவேல், ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி சுகந்தினி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது, புதிய செயற்குழுத்தெரிவு இடம்பெறும்.

அத்துடன் இது வரை அங்கத்துவம் பெறாதவர்கள் ஓய்வூதிய இலக்கம், அடையாள அட்டையுடன் வருகை தந்து நிதியத்தில் இணைந்து கொள்ளலாம். மேலதிக கொடுப்பனவை பெற்றுக் கொள்ள, செலுத்தப்படும் அங்கத்துவப் பணத்தை மாற்றிக் கொடுக்கும் சம்மதக் கடிதப் படிவம் பெற்றுக் கையளிக்கலாம். அங் கத்துவ அட்டை கிடைக்கப்பெறாத புதிய அங்கத்தவர்கள் சமுகம் தந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)


நன்றி:-மிரர்

# புலன் விசாரணை அதிகாரியாக நியமனம்



நெல்லியடியைச்சேர்ந்த சி. நற்குணலி ங்கம் என்பவர் இங்கை மனித வுரிமைகள் அமைப்பின் யாழ். மாவட் புலன் விசாரணை அதிகாரியாக 1.1.2014 முதல் இலங்கை மனிதவுரிமைகள் அமைப்பினால் நியமிக்கப்பட் டுள்ளார்.

இவர் கரவெட்டி மத்தியஸ்தர் சபை தவிசாளராகவும் வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினராகவும் நெல்லியடி சனசமூக நிலைய உறுப்பினராகவும் நெல்லியடி முன்பள்ளி இணைப்பாளராகவும் இருந்ததுடன் இன்னும் பல பதவிகளையும் வகித்துள்ளார். (அ-10)

# டிப்ளோமா கற்கை நேர்முக பரீட்சைக்கு தோற்றலாம்

இலங்கை நூலகச் சங்கத்தின் ஏற்பாட்டில் நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 இற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் அமைந்துள்ள பௌதீகவியல் துறை விரிவுரை மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம்பிற்பகல்3.30மணிவரைநடைபெறும்.

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றவுள்ளோரின் கல்வித் தகைமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த(உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி. அத்துடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றுள் மொழியில் திறமைச் சித்தியும் கணிதம், தூய கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடை பெறும்.

இக்கற்கை நெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளலாம்.

பங்குகொள்பவர்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், விவாகப் பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு), கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது) ஆகிய ஆவணங்களுடன் தோற்றமுடியுமென இச்சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கலாநிதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.(அ-2)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலையும்இணைந்து நடத்தும் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நரசிங்க வைரவர் ஆலய மண்டபத்தில் பொறுப்பாசிரியர் இ.ஜெயப்பிரகாஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ந.குணரத்தினம்கலந்துகொள்வார். ஆசியுரையை பிரம்ம ஸ்ரீ கோபாலசர்மா வழங்குவார். (அ-2)

# மத்திய அரசாங்கம் தனது சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்

## ஐ.நா.பிரதிநிதியிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு

மத்திய அரசாங்கம் தனது சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி மேரி ஜமிற்றவிடம் எடுத்துக்கூறியதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான அரசியல் விவகாரங்களுக்கான யு.என்.ஏயின் பணிப்பாளர் மேரி ஜமிற்ற உள்ளிட்ட மூன்றுபேர் கொண்ட குழுவினர்நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்த வருகை தந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அவர்கள் நேற்று காலை 9 .30 மணியளவில வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன் பாகவுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதனையடுத்து யாழ்.கோவில் வீதியிலுள்ள முதலமைச்சரின் வாசஸ்தலத்திற்கு முற்பகல் 11 மணியளவில் வருகைதந்த அவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்தச்சந்திப்பையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்தொடர்பானவிடயங்களை ஆராயவே இங்கு வந்திருந்தனர். அரசியல் ரீதியாக எங்களுக்கு இருக்கும் பிரச்சினை களுக்கு தீர்வு தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர்.

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு கடந்த 2009, 2010, 2011,2012 ஆம் ஆண்டுகளில் பல முறை வடக்கிற்கு தேர்தலை நடத்துமாறு கோரிக்கைவிடுத்தோம். இறுதியில் இந்தியாவின் கடுமையான அழுத்தத்தையடுத்து வடக்கு மாகாணசபைத்தேர்தலை கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் அரசாங்கம் நடத்தியது.

மேலும், மாகாண சபையின் நடவடிக்கைகளுக்கு பல விதங்களிலும் முட்டுக் கட்டையாக இருப்பதால் இங்குள்ள பிரச்சினைகள் தேவைகளை சரிவரக் கவனித்துக் கொள்ள முடியாத நிலையிலேயே நாங்கள் எங்களுடைய பணிகளை ஆற்றி வருகின்றோம்.

அதே போன்று இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறியிருக்கிறோம்.



இதே போன்று கடந்த காலத்திலும் எடுத்துக் கூறிய பல விடயங்களை இன்றும் எடுத்துக் கூறியிருக்கிறோம். இத்தகைய விடயங்கள் அவருக்கு புதுமையாக இருந்திருக்கக் கூடும்.

இதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தால் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்றும் கேட்டிருந்தார். அதற்கு எங்களுடைய மத்திய அரசாங்கம் தனது சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பதிலளித்திருந்தோம்.

அதாவது மாகாண சபைகளுக்கு சில உரித்துக்கள் அதிகாரங்கள் சட்டத்தின் பிரகாரம் கொடுத்திருக்கின்ற போது அந்தந்த உரித்துக்கள் அவர்களிடம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க கூடாது.

மாகாண சபையை சீரழித்து, தடுத்து முன்னேற விடாமல் செயற்படுவது என்பது உட்பட பல விடயங்களை எடுத்துக் கூறியிருக்கின்றோம். இதற்கு தங்களால் செய்யக் கூடியது மிகவும் குறைவென்றும் ஆயினும் எங்களுடைய கருத்துக்களை அதிகாரத்திலுள்ளவர்களிடம் தெரியப்படுத்தி நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? என்பது தொடர்பாக ஆராய்வதாகவும் ஐ.நா பிரதிநிதி கூறியதாக முதலமைச்சர், மேலும் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பில் வடக்கு மாகாண அமைச்சர்களான ப.சத்தியலிங்கம, பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மிருசுவில் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள்

மிருசுவில் பிரதேசத்தில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டதையடுத்து அவர்களால் வளர்க்கப்பட்ட நாய்களின் தொல்லை அதி கரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக பிரதேசங்களிலும் வீதிகளிலுமிருந்த இராணுவத்தினரின் காவலரண்கள் அகற்றப்பட்டு காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந் நிலையில் மிருசுவில் பிரதேசத்திலிருந்த காவலரண்கள் அகற்றப்பட்டதையடுத்து, இராணுவத்தினரால் வளர்க்கப்பட்ட நாய்கள் தற்போது கட்டாக்காலிகளாக வீதியில் அலைந்து திரிகின்றன.

இவை வீதியால் செல்பவர்களை கடிப்பதோடு, வீதிப்போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தி வருகின்றன. இதனால், மக்கள் அச்சத்துடன்பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட் டுள்ளது.

அது மாத்திரமின்றி மக்களினால் வளர்க்கப்பட்டு வருகின்ற ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களையும் வேட்டையாடுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனால் பிரதேச மக்கள் பல அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

எனவே, மிருசுவில் பிரதேசத்தில் உள்ள கட்டாக்காலி நாய்களின் தொல்லையை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டோரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-85)




# வைத்தியசாலை ஊழியர்கள் ஐவர் திடீர் சுகயீனம்

தெல்லிப்பழை வைத்தியசாலை ஊழியர்கள் ஐந்து பேர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் நேற்றுக் காலை வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை உட்கொண்ட உணவு விசமாகியதால் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கொண்டு வந்த கடலையினை உட்கொண்ட பின்னர் ஏற்பட்ட வாந்தி மற்றும் மயக்கம் காரணமாக மேற்படி ஐந்து பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் மேலும் தெரிவித்தன. (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உயர்மட்டக்குழு நேற்று தென்னாபிரிக்கா பயணம்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலையை தெளிவுபடுத்தும் முகமாகவும் ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு எதிராக அரசாங்கத்துக்கு ஆதரவு திரட்டும் வகையிலும் அரசாங்கத்தின் உயர்மட்டக் குழு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று தென்னாபிரிக்கா பயணித்துள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா, எம்.பி. சஜின் டி வாஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருண் தம்பிமுத்து ஆகியோர் அடங்கிய குழுவே தென்னாபிரிக்கா சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு கூறியது.

ஜெனீவா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு முன்னர் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் இலங்கையின் கள நிலைமை, மோதலுக்குப் பின்னரான அபிவிருத்தி, நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, அரசாங்கத்தின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் தலைமையில் பல்வேறு தரப்பிலும் விளக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

அவ்வகையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவும் தென்னாபிரிக்கா விஜயமாவதாக தெரிய வருகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் தங்கியிருக்கும் இலங்கை பிரதிநிதிகள் அந்நாட்டின் அரசாங்கம் மற்றும் தற்போது ஆட்சியிலுள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்தும்.

இலங்கை அரசாங்கம் தென்னாபிரிக்காவின் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பிலான அனுபவங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்ற அதேவேளை அவற்றை எமது நாட்டிற்கு ஏற்ற வகையில் மாற்றி நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் ஆராய்ந்து வருவதாக அமைச்சு வட்டாரங்கள் கூறின. (அ-2)

# ஆஸி.கிரீன் கட்சி செனட்டர்கள் இலங்கை மீது பழி சுமத்துகின்றனர்

## சிங்கள இணையம் குற்றச்சாட்டு

அவுஸ்திரேலிய கிரீன் கட்சியின் செனட்டர்கள் இலங்கை மீது தொடர்ந்தும் பழிசுமத்தி வருகின்றனர். எனினும் அவர்கள் இலங்கையில் இந்தியா மேற்கொண்ட மனிதவுரிமை மீறல்களை ஏன் கண்டு கொள்ளவில்லை என்று இலங்கையின் சிங்கள இணையத்தளம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

அவுஸ்திரேலிய கிரீன் கட்சியின தலைவரான செனட்டர் கிரிஸடினமில்னெ தொடர்ச்சியாக இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார்.

1976 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை இலங்கையின் தமிழ் தலைமைகள் போரை முன்னெடுத்தன.

இந்தநிலையில் அவுஸ்திரேலிய செனட் மீண்டும் ஒருமுறை இலங்கையின் மீது போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று கோரியுள்ளது.

எனினும் அந்த செனட் சபை 1987 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை இலங்கையில் தமிழர்கள் மீது இந்திய அமைதிப் படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் குறித்து ஏன் கவனத்தில் கொள்வதில்லை என்று சிங்கள இணையத்தளம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதன்மூலம் மேற்கத்தேய நாடுகள் ஒரு பக்கசார்பாக நடந்து கொள்வதை அவதானிக்க முடிவதாக இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஜெனீவா யோசனைக்கு இந்தியா ஆதரவளிக்கிறது.

எனினும் எதிர்கால பிரதமராகலாம் என்று எதிர்ப்பார்க்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளர் நரேந்திர மோடி, குஜராத்தில முஸ்லிம்களை கொலை செய்த குற்றத்துக்காக அமெரிக்கா விசா வழங்க மறுத்தமையை இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# புகைப்படக் கண்காட்சி

இலங்கையின் அழகு எனும் தொனிப் பொருளில் akiy யின் புகைப்படக் கலைக் கண்காட்சி மற்றும் விற்பனை நாளை வெள்ளிக்கிழமை, மறுநாள் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சிறிநதியா NSR Ruban Complex இல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஊடக நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். (அ)


## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
## Media Resources and Training Centre, University of Jaffna.

இதழியல் டிப்ளோமா (முழுநேரம் - இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு – 2014/2015
**Diploma in Journalism – 2014/2015**

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான 2014/2015 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

**விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியும் (Yes) பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

- அச்சு ஊடகம் (Print Media)
- இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
- இணைய ஊடகம் (New Media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பயிற்சிகள்**

- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
- றேடியோ மற்றும் ரீ.வி நிகழ்ச்சிகள் தயாரித்தல்
- ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடாத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
- ஆவணப்படத் தயாரிப்பு
- சென்னைப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த பயிற்சிகள்

**அனுமதிக்கான தெரிவுமுறை**

- எழுத்துத் தேர்வும்
  (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)
- நேர்முகத்தேர்வும்

**கற்கை நெறிக் காலம் 2 ஆண்டுகள் (முழுநேரம்)**

| கட்டணங்கள் | |
|---|---|
| கற்கை நெறிக் கட்டணம் | ரூபா 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா 1,000.00 |
| மொத்தம் | ரூபா 22,500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல 84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூ.100.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 03.03.2014.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல
0212229873
பதிவாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
(சி-6544)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 12 ¾<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: BSMS, MSC / ஆயுள்வேத வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/2820 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 34 ¼ செவ் 12 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: G/2822 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 9 ¾ சூரி செவ் 9 ல்<br>உயரம்: 185 cm<br>தகைமை/தொழில்: B.E (ECE), MSc – Following (UK Student Visa)<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர் மட்டும்<br>தொ.இ: B/2823 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 33 ¼<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2825 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 21 செவ் 4 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர் (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/2824 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா: 23 ¾<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: G/2821 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 ½<br>தகைமை/தொழில்: BSc / Business Analysis (Bank) (UK - PR)<br>தொ.இ: B/2826 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 85 செவ் 8 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc IT / வங்கியாளர்<br>தொ.இ: G/2818 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு அத்தாட்சி பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை

## மாணவர்களின் பெற்றோர் கவலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களில் கல்வி பயில்கின்ற அநேக மான மாணவர்களுக்கு பிறப்பு அத்தாட்சி பத்திரமின்மையால் பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் அதிகமானவர்களின் பிறப்பத் தாட்சி பத்திரங்கள் அழிவடைந்துள்ளன.

இவர்களில் அநேகமானவர்கள் மாண வர்களாகும்.

இம்மாணவர்களின் பெற்றோர் பிறப்பத் தாட்சிப்பத்திரத்தை மீளப்பெறுவதற்கு பத்தி ரத்தின் பதிவு இலக்கத்தை தவறவிட்டுள்ள னர்.

ஆயினும் பிறந்த ஆண்டு, மாதம் திகதி யைக் கொண்டு பிறப்பத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்கு கொழும்பிற்கு சென்றும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பிறப்பத்தாட்சி பத்திரமின்றி மாணவர்கள் இருப்பதனால் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியாமலுள்ளனர்.

இதனால் கடந்த வருடங்களில் பரீட்சைக்கு பல மாணவர்கள் தோற்றவில்லை.

அதுமாத்திரமின்றி பாடசாலைகளில் இடம் பெறும் ஏனைய போட்டிகளிலும் பங்கு கொள்ள முடியாத நிலைக்கு இம்மாணவர் கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் வலயக் கல்வி பணிப்பாளர் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, மாணவர்களின் நிலையைக் கருத் திற்கொண்டு பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுக்கொடுக்க இரண்டு கல்வி வலயங்க ளின் பணிப்பாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# சேவைநலன் பாராட்டு

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடந்த 23 ஆண்டுகளாக சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய திருமதி நேசராணி இராசநாயகத்தின் சேவை நலன் பாராட்டுவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா தெற்கு கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இவ் விழாவில் வாழ்த்துரைகளை வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி நா. மாணிக்கவாசகம். வவுனியா கோடடக் கல்விப்பணிப்பாளர் எம்.பி. நடராஜ் ஆகியோர் உட்பட பலர் ஆற்றவுள்ளனர்.

(அ-9-266)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி. சிதம்பரநாதன் சரஸ்வதி (பேபி அன்ரி)

(பொதுமுகாமைத்துவ உதவியாளர் தரம் -1 தேர்தல்கள் திணைக்களம், கச்சேரி யாழ்ப்பாணம்)

மண்ணில் 1960 03 24

விண்ணில் 2014 01 22

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (21.02.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
021 3216570, 077 5566581

(5638)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது ஆண்டு கால யுத்தமும் யாழ். மாவட்டத்தின் சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களும் பிரச்சினைகளும்

சென்ற வாரத் தொடர்ச்சி...

### பொருளாதார உட்கட்டுமானங்கள்

யுத்தத்தின் காரணமாக எமது பௌதீகச் சொத்துக்கள், மனிதவளங்கள் அழிக்கப்பட்டதோடு பொருளாதார உட்கட்டுமானங்களும் முற்றாகச் சீர்குலைந்து காணப்பட்டன. யுத்தம் முடிவடைந்த பின்னர் பொருளாதார உட்கட்டுமானத்தில் வேகமான விருத்தி நிலை தோன்றியுள்ளது.

பெருந்தெருக்கள், மின்சாரம், புகையிரதச்சேவை போன்ற உட்கட்டுமான விருத்தியின் பலாபலன்களை நாம் இப்போது அனுபவித்து வருகின்றோம். நீண்ட வீதிகளில் பயணம் செய்யும்போது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இது யுத்தத்தின் பின்னரான நல்லதொரு மாற்றமாகும். உட்கட்டுமான விருத்தியுடன் யாழ்ப்பாணம் உட்பட்ட வடமாகாணத்தில் வர்த்தக நிலையங்கள், நிதிக்கம்பனிகள், வங்கிகள் என்பன ஏராளமாகத் தோன்றியுள்ளன.

இப்போது கிராமப் புறத்திலுள்ள ஒவ்வொருவரும் நெருங்கிய தொடர்புகளை பேணக்கூடியவாறு வங்கிகள் கிராமப் புறங்களுக்குச் சென்று விட்டன. நிதிக்கம்பனிகளும் நிதி சேகரிப்போடு லீசிங் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன. யுத்தத்தின் பின்னர் மத்திய வங்கியும் தனது கிளையை யாழ்ப்பாணத்தில் அமைத்திருக்கின்றது.

பெருமளவான நிதிசார் நிறுவனங்களின் நிதிப் பாய்ச்சல்கள் நன்மைகளை ஓரளவு பெற்றுத்தந்த போதும் அதற்கு அப்பால் காசோலை மோசடி, கிரெடிட் காட் மோசடி, பணத்தை தூய்மையாக்கல் போன்ற நிதிசார்பான மோசடிகள் யாழ்ப்பாணத்தில் அதிகமாகி விட்டன. இதைவிட சீட்டு, மீற்றர் வட்டி என்ற சட்டரீதியற்ற விடயமானது வர்த்தக முறிவுகளுக்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் சில வர்த்தக நிறுவனங்கள் முறிவு நிலைக்கு சென்றமை வர்த்தகத்தில் ஓர் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது. வியாபாரத்தில் நெறிமுறையினை பின்பற்றுதல் என்ற விடயம் அரிதாகி வருகின்றது. மேலும் இங்கு நான் அழுத்திக் கூறக் கூடிய விடயம் யாதெனில் யாழ்ப்பாண மக்கள் அதிக ஆபத்தை தாங்குவதற்கு விரும்புவதில்லை. நிதிப்பாய்ச்சல் உட்கட்டுமான விருத்திக்குப் பின்னர் அவற்றைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பையும் பொருளாதார சுபீட்சத்தையும் தரக் கூடிய சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் பெருமளவில் ஆரம்பிக்கப்படவில்லை. கட்டட நிர்மாணப் பணிகள் யுத்தத்தின் பின்னர் விருத்தியடைந்த ஒரு தொழிற்றுறையாகும்.

எனவே இத்துறைக்கு அவசியமான Hardware வர்த்தக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு தெருவில் இவ்வாறான வர்த்தக நிலையங்கள் தேவைக்கு அதிகமான ஆரம்பிக்கப்பட்டன.

இதேபோல தெருக்கள் தோறும் மளிகைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான தொழிற்றுறைகள் ஒப்பீட்டளவில் ஆபத்தைக் குறைவாகக் கொண்டவையாகும். இப்போது கட்டட நிர்மாணத் துறை தொழில்கள் வீழ்ச்சி நிலைக்கு யாழ்ப்பாணத்தில் வந்து விட்டன. இதனால் இதை நம்பி உருவாக்கப்பட்ட தொழில்களும் ஓர் தேக்க நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

எனவே உற்பத்தித்திறன் கொண்ட சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்களை ஆரம்பிப்பதன் மூலமே தொழில்வாய்ப்புக்களையும்



கல்வித் தரிசனம்

பொருளாதார சுபீட்சத்தையும் பெறமுடியும். 1990களில் கண்ணாடித் தொழிற்சாலை, ஆணித்தொழிற்சாலை, இறால், மீன்பதனிடும் தொழிற்சாலை, நெசவுத்தொழிற்சாலைகள், சவர்க்காரத் தொழிற்சாலை போன்ற பல சிறிய நடுத்தர நிறுவனங்கள் யுத்தத்தினால் அழிவடைந்துவிட்டன. இவ்வாறான தொழிற்றுறைகள் மீண்டும் உருவாக்கப்படவேண்டும்.

எமது வர்த்தகர்கள், பணம் படைத்தோர், உற்பத்தி சார்ந்த கம்பனிகளை உருவாக்க வேண்டும். நல்ல விவசாய நிலங்களைக் கொண்ட வடமாகாணத்தில் அவ்வளங்களைக் கொண்டு விவசாயம்சார் தொழிற்றுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இது தனியே இலாப நோக்கில் மட்டுமல்லாது சமூக பொருளாதார நோக்கிலும் செய்யப்பட வேண்டும்.

### வறுமையில் மாற்றம்

யுத்தத்தின் பின்னரான சமூகம் என்பது வறுமையும் ஏழ்மையும் நிறைந்ததாகவே இருக்கும். அதுவே ஆபிரிக்க நாடுகளின் அனுபவமாகும். அதிலும் 30 வருட கால யுத்தம் அந்த சமூகத்தின் பொருளாதார இருப்பு நிலையை கருவறுத்து விடுவதுதான் நிஜமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் யாழ்ப்பாண சமூகம் அதில் விதிவிலக்காக காணப்படுகிறது.

இது எவ்வாறு சாத்தியமானது? 1980, 1990களின் ஆரம்ப காலப்பகுதியில் யாழ்ப்பாண சமூகத்தில் முழு அளவான வறுமை உயர்வாக இருந்தது. பாடசாலைகளில் பிள்ளைகளை படிப்பிப்பதற்கு பெற்றோர்கள் கஷ்டங்களை அனுபவித்தனர். தனது பிள்ளைகளுக்கு தேவையான அப்பியாச புத்தகங்கள் உட்பட பாடசாலை உபகரணங்களை வழங்குவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினர். கிராமப்புற மாணவர்கள் சாதாரண செருப்பைக் கூட அணிவதில்லை.

நடந்தே பாடசாலைக்குச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க குடிசை வீடுகளே காணப்பட்டன. குறிப்பாக தென்மராட்சியில் பெரும் பகுதி குடிசை வீடுகளால் ஆனது. மின்சாரவசதி பெற்றுக் கொண்டோர் மிகக் குறைவு. வானொலிப் பெட்டிகளை வைத்திருப்பது என்பது மிகக் கஷ்டமானது. எமது சமூகத்தில் பெரும்பான்மையானோர் 1980 களில் இவ்வாறான ஓர் நிலையிலிருந்தனர். அன்றாடம் குடும்பத் தலைவன் கொண்டுவரும் கூலியைக் கொண்டு அன்றிரவுக்கான உணவினைத் தயாரித்து பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய பொருளாதார கஷ்டத்தில் இருந்தனர்.

**யா/ கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் நிறுவுநர் வீரபாகு சிற்றம்பலமுடையார் நினைவுப்பேருரை, பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னத் துரை விஜயகுமார் அவர்களால் 12.01.2014 அன்று ஆற்றப்பட்டது.**

சிலவேளை ஒருவேளை உணவைக்கூட தவிர்த்தனர். அவ்வாறு இருந்த யாழ்ப்பாணத்திலிருந்த பெரும்பாலான மக்கள் யுத்தத்தின் காரணமாக இதனை விட பொருளாதார ரீதியாக மிகப்பெரிய சீர்குலைவு நிலைக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால் உண்மை யில் எமது பொருளாதார நிலையில் யுத்தம் எதிர்விளைவை ஏற்படுத்தவில்லை.

மாறாக எமது குடும்ப பொருளாதாரம் முன்பைவிட நல்ல நிலைக்கு வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. யுத்தத்தின் காரணமாக இளைஞர்களும் நடுத்தர வயதுடையோரும் ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா உட்பட்ட நாடுகளுக்கு இடம்பெயர்ந்தமையின் விளைவே இதுவாகும். ஐரோப்பிய நாடுகளில் உழைத்த பணத்தை தமது பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் பெருமளவில் அனுப்பி வைத்தமை நாம் பொருளாதார நிலையில் தளம்பல் நிலைக்குச் செல்லாமைக்குக் காரணமாகும்.

மேலும் வெளிநாட்டிலுள்ளோர் தமது திருமணத்திற்கு யுவதிகளை யாழ்ப்பாணத்திலிருந்தே பெற்றுக்கொண்டமை எமது யாழ்ப்பாண சமூகத்தின் குடும்ப பொருளாதார சுபீட்சத்திற்கு முக்கியமான இன்னொரு காரணமாகும். வெளிநாடு சென்ற யுவதி தனது மற்றைய பெண் சகோதரிகளையும் வெளிநாடுகளுக்கு வரவழைத்ததோடு தனது தாய் தந்தையர், உறவினர்கள் போன்றோருக்கு தேவையான பணத்தையும் அனுப்பிவைத்தனர். அதிக பெண்பிள்ளைகள் கொண்ட குடும்பம் பொருளாதார ரீதியில் ஓர் உயர்வு நிலைக்கு வந்தமை குறிப்பிட்ட விடயமாகும்.

உள்நாட்டு யுத்தம் இளைஞர்களையும் நடுத்தர வயதுடையோரையும் ஐரோப்பிய நாடுகளை நோக்கி இடம்பெயர வைக்க தமிழர்களின் ஐரோப்பிய நாடுகளை நோக்கிய இடப்பெயர்வு யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதி மக்களின் குடும்ப பொருளாதார உயர்வுக்கு வழிவகுத்தது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து உட்பாய்ந்த பணம், உறவினர்களை வெளிநாடுகளில் கொண்டிராத குடும்பங்களுக்கும் கசிந்து சென்றிருக்கின்றது. யாழ்ப்பாண குடும்பப் பொருளாதார நிலை முன்பை விட உயர்ந்துள்ளது என்று கூறினாலும்கூட குறித்த ளவானோர் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒருவர் நாட்கூலி ஒன்றுக்குச் செல்வாராயின் அவரது அடிப்படை உணவுத் தேவைக்கு போதுமானது. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு டொலர் என்ற உலக வங்கியின் வறுமைக் கோட்டினடிப்படையில் நோக்கினால் 4 அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு ஏறத்தாழ 450 ரூபா போதுமானது. மாறாக ஒரு நாளைக்கு ஒருவருக்கு 2 டொலர் என்ற உலக வங்கியின் வறுமைக் கோட்டினடிப்படையில் நோக்கினால் 4 அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 960 ரூபா போதுமானதாகும். யாழ்ப்பாணத்தில் ஒருவர் ஆயிரம் ரூபாவை உழைப்பது கடினமான விடயமல்ல. உலக வங்கியின் 2 டொலர் என்ற வறுமைக் கோட்டை நோக்குகின்றபோது இலங்கையில் 30 வீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் இருக்கின்றார்கள்.

அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் வீடமைப்புத் திட்டத்தை வழங்கியதன் காரணமாக குடிசை வீடுகளுக்கு இடமற்றுப் போய்விட்டது. உண்மையில் யுத்தம் உலக நாடுகளில் ஏற்படுத்தியது போல் குடும்ப பொருளாதார நிலையில் யாழ்ப்பாண சமூகத்தில் எதிர்விளைவை ஏற்படுத்தவில்லை. இதற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து நம்மவர்கள் அனுப்பிய பணமே காரணமாகும். இன்று எல்லோரது வீடுகளிலும் T.V, CD Player, மோட்டார் சைக் கிள், துவிச்சக்கரவண்டி போன் றன சாதாரணமாகக் கிடைக் கக்கூடிய விடயமாகி விட்டது.



**Dr. சி. விஜயகுமார்**
**சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்**

சிலர் யுத்தம் வறுமையைத் தோற்றுவித்துள்ளது என்று கூறலாம். ஆனால் உண்மையில் இதற்கு உரிய ஆய்வு ஒன்று செய்யப்படவேண்டும். எனது தென்னிலங்கை நண்பர் அண்மையில் பெரும் எதிர்பார்ப்போடு முதன்முதலாக யாழ்ப்பாணத்திற்கு வந்தார். அவருக்கு ஆச்சரியம்.

பெரிய கட்டடங்கள், பெரிய வீடுகள், மின்சார வசதிகள், மக்களின் மோட்டார் சைக்கிள் பாவனை, குறிப்பாக பெண் பிள்ளைகளின் ஸ்கூட்டிப் பயணம் எல் லாமே சேர்ந்து அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஏனெனில் யுத்தத்தினால் சீரழிந்த பிரதேசம், சமூகம் எவ்வாறு இருக்கும் என்ற கற்பனையில் இங்கு வந்த போது எமது சுபீட்ச நிலை அவர்களை நன்கு சிந்திக்கத் தூண்டியது.

இங்கு ஒன்றைக்கூற விரும்புகிறேன். குடும்ப பொருளாதாரம் சராசரியாக உயர்ந்த போதும் நான் ஏற்கனவே கூறியது போல கல்விமான்கள், ஆற்றல்மிக்க இளைஞர்கள், அரசியல் ஞானம் படைத்தோர் ஆகியோரை யுத்தம் காவு கொண்டு விட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, மன்னார் போன்ற தமிழ் மாவட்டங்களில் யுத்தமானது கடுமையாக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இம்மாவட்டங்களில் வறுமையின் தீவிரத் தன்மை முன்பைவிட அதிகமாகவேயிருக்கின்றது.

(தொடரும்)

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குணசேகரன்-குலசேகரன்

...ஆகையால் அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் சந்திரவர்மர் அயல் ராஜ்யத்தின் மீது படையெடுத்து, வெற்றி கண்டு, அதை குணசேகரனுக்கு உரிமையாக்கி விடலாம் என்று கருதினார்.

அப்போது, விசால ராஜ்யத்து இளவரசி சந்திரகலாவின் சுயம்வரம் அறிவிக்கப்பட்டு, அதற்கு பல நாட்டு இளவரசர்கள் அழைக்கப்பட்டு இருந்தனர்.

உடனே, மன்னர் மூத்தவன் குலசேகரனுக்கு பதிலாக குணசேகரனையே சுயம்வரத்திற்கு அனுப்ப எண்ணினார்.

சந்திரகலா விசாலராஜாவிற்கு ஒரே பெண்! அதனால், அவளை மணம் புரிந்தால், குணசேரன் எதிர்காலத்தில் விசாலராஜ மன்னன் ஆகிவிடுவான் என்ற நப்பாசைதான் காரணம்! அதைப்பற்றி மன்னர் சந்திரவர்மர் குணசேகரனிடம் கூறியபோது, அவனும் முதலில் சுயம்வரத்திற்குச் செல்லவே விரும்பினான்.

ஆனால் குலசேகரன் சந்திரகலாவை விரும்புவதையறிந்த அவன், உடனே தன் விருப்பத்தை கைவிட்டு விட்டான்.

அதனால் குலசேகரன் மட்டும் சுயம்வரத்திற்குச் சென்றான்.

பல் ராஜ்யங்களில் இருந்து மன்னர்களும், இளவரசர்களும் சந்திரகலாவின் கரம்பற்ற விரும்பி சுயம்வரத்தில் கூடியிருந்தனர். சந்திரகலா தன் கையில் மாலையுடன் சுயம்வர மண்டபத்திற்குள் நுழைந்த போது, திடீ



ரென ஒருவன் முன்னே வந்து அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு, "என் பெயர் மித்ரபிந்தன்! நான் சந்திரகலாவை மிகவும் நேசிக்கிறேன்.

அவள் எனக்குத்தான் உரியவள்! அதனால் நான் இவளை என்னுடைய மகாபர்வத ராஜ்யத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.

உங்களுக்கு வீரம் இருந்தால், போரில் என்னைத் தோற்கடித்த பிறகு, சந்திரகலாவை அழைத்துச் செல்லுங்கள்!" என்று சவால் விட்டுவிட்டு, அங்கு தயாராக இருந்த தன் குதிரைமீது அவளை பலவந்தமாக ஏற்றிக்கொண்டு, விரைந்து வெளி ஏறினான்.

சந்திரகலாவின் தந்தை வீரகுப்தர், தன் மகளை கயவன் மித்ரபிந்தனிடம் இருந்து மீட்டு வரும் இளவரசனுக்குத் தன் பெண்ணை மணமுடித்துத் தருவதுடன், தன் ராஜ்யத்தையும் அளிப்பதாக அறிவித்தார்.

உடனே சில நாட்களிலேயே, பல மன்னர்கள் மகாபர்வதத்தின் மீது படையெடுத்து, சந்திரகலாவை மீட்க முயன்றனர்.

ஆனால், மலைப்பிரதேசமான மகாபர்வத ராஜ்யத்தோடு போரிடுவது மிகக் கடினமாக இருந்தது.

படை எடுத்துச் சென்ற மன்னர்கள் அனைவரும் போரில் கொல்லப்பட்டனர்.

அவ்வாறு, போர்க்களத்தில் உயிர் நீத்தவர்களில் குலசேகரனும் ஒருவன்!

தன் சகோரதன் கொல்லப்பட்டதையறிந்த குணசேகரன் மித்ரபிந்தன் மீது தானே போர்தொடுக்க முடிவு செய்தான்.

ஆனால், மற்றவர்களைப் போல் உடனே படையெடுத்துச் செல்லாமல், முதலில் மித்ரபிந்தனைப் பற்றிய தகவல்களை சேகரிக்க முற்பட்டான்.



மித்ரபிந்தன் மகாபர்வதக் கோயிலின் அம்மன் ருத்ரபைரவியை சிறுவயதுமுதல் ஆராதனை செய்து, அம்மனிடமிருந்து பல விசேட சக்திகளைப் பெற்றிருந்ததாகத் தெரிந்து கொண்டான்.

ஒருமுறை ருத்ரபைரவி அவனுடைய கனவில் தோன்றி தனக்கு இரத்த தாகம் ஏற்பட்டுள்ளதாகவும், நூறு மன்னர்களை அவளுக்குப் பலியிட்டால், அவன் மகா பலம் பொருந்தியவனாகத் திகழ வரம் தருவதாகவும் கூறினாளாம்! ருத்ரபைரவியின் சூலாயுதத்தைக் கொணடு மித்ரபிந்தனை யாராவது தாக்கினால் மட்டுமே அவன் இறப்பான் என்றும் கூறினாள்.

மேற்கூறிய தகவல்களை அறிந்த பிறகு, குணசேகரன் பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டபின், அவன் தனியாக மாறுவேடத்தில் மகாபர்வதம் சென்றான்.

ஒருநாள் நள்ளிரவில், மித்ரபிந்தன் சந்திரகலாவுடன் ருத்ரபைரவியின் கோயிலுக்குச் சென்றபோது, அவர்கள் அறியாமல் பின் தொடர்ந்தான்.

அம்மனின் சன்னிதிக்கு மித்ரபிந்தன் சென்றதும் குணசேகரன், விரைந்து கருவறைக்குள் புகுந்தான்.

அம்மனின் கையிலருந்த சூலத்தை எடுத்து, அவள் முன்னிலையில் மித்ரபிந்தன் மார்பில் சூலத்தைப் பாய்ச்சி, அவனைக் கொன்றான்.

உடனே குணசேகரன் முன் தோன்றிய அம்மன், "இத்துடன் நூறு இளவரசர்கள் பலியாகி விட்டனர். இறுதியாக நூறாவது இளவரசனை பலி கொடுத்த உனக்கு நான் வரம் தர விரும்புகிறேன். என்ன வேண்டுமோ, கேள்!" என்று சொல்ல,

மித்ரபிந்தனைத் தவிர அனைவரையும் உயிர்ப்பிக்க வேண்டும் என வரம் கேட்க, அம்மனும் அவ்வாறே வரம் தந்தாள்.

உயிர் பெற்று எழுந்த மற்ற மன்னர்களையும் இளவரசர்களையும் நோக்கி "உங்களுக்கு உயிர் கொடுத்த குணசேகரனை உங்கள் சக்கரவர்த்தியாகக் கருதுங்கள்!" என்று கூறி மறைந்தாள்.

(முற்றும்)




- 1547 - ஆறாம் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1627 - யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.
- 1798 - பாப்பரசர் ஆறாம் பயஸ் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1835 - சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.
- 1910 - எகிப்தியப் பிரதமர் பூட்ரோஸ் காலி (Boutros Ghali) கொல்லப்பட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா எனிவெட்டாக் தீவைக் கைப்பற்றியது.
- 1962 - மேர்க்குரி திட்டம்: ஜோன் கிளென் பூமியை மூன்று முறை சுற்றி பூமியைச் சுற்றிய முதலாவது அமெரிக்கர் என்ற புகழைப் பெற்றார்.
- 1965 - அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படங்கள் எடுத்த ரேஞ்சர் 8 விண்கலம் சந்திரனுடன் மோதியது.
- 1987 - அருணாசலப் பிரதேசம் அசாமில் இருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.

பிறப்புகள்

- 1876 - கா. நமச்சிவாயம், தமிழறிஞர் (இ. 1936)
- 1937 - ரொபேர்ட் ஹியூபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர்
- 1945 - ஜியார்ஜ் ஸ்மூட், அமெரிக்க விண்ணியல் அறிஞர்

இறப்புகள்

- 1896 - ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், புலவர் (பி. 1820)
- 1907 - ஹென்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு வேதியியலாளர், (பி. 1852)
- 1916 - கிளாஸ் ஆர்னல்ட்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1844)
- 1972 - மரீயா கோப்பர்ட்-மேயெர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர், (பி. 1906)
- 1976 - ரெனே காசின், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1887)
- 2008 - டி. ஜி. எஸ். தினகரன், கிறித்துவ மறைபரப்புனர் (பி. 1935)
- 2011 - மலேசியா வாசுதேவன், பாடகர், நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

.....நீங்கள் பத்திரிகையிலிருந்து வருகிறீர்களா?


இல்லை, தனிப்பட்ட பதிப்பகத்தார். ஆன்மீக நூல்களை வெளியிடுவதில் எங்கள் பதிப்பகம் முன்னணியில் இருக்கிறது. சங்கர் பதிப்பகம் என்றாலே தரமான ஆன்மீக நூல்களை வெளியிடும் பதிப்பகம். குறிப்பாகச் சித்தர் இலக்கியம் சம்பந்தமான நூல்களை வெளியிடும் நிறுவனம் என்ற நல்ல பெயரும் உண்டு.

இவர் தான் இந்த நூலின் ஆசிரியர் சி.எஸ். முருகேசன். இவர் ராஜ் மோகன் பதிப்பகத்தார், பெயர் சாக்ரடீஸ். நான் கோமதிநாயகம், சங்கர் பதிப்பக உரிமையாளர் என்று அறிமுகப்படலம் முடிந்ததும் சற்று நேரம் மௌனத்திலேயே இருந்தார்.

அவர் மௌனத்திற்கான காரணம் புரியாமல் அருகிலிருந்த பெண் மணியை நோக்கினோம். அதற்குள் அந்தப் பெண் துறவியே வாய் திறந்தார்.

பத்திரிகைகாரர்களெல்லாம் மலையைப் பிரபலப்படுத்துகிறேன் பேர் வழி என்று இம்மலையைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் எல்லாம் எழுதிவிட இங்கு சித்தர்கள் நடமாட்டம் இருப்பதாக எண்ணி லட்சக் கணக்கில் கூட்டம் வர ஆரம்பித்து விட்டது. அதனால் இந்தக் காட்டின் அமைதியே கெட்டுவிட்டது.

பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு சாமி தரிசனம் செய்ய வர்ற கூட்டம் நடைபாதைகளில் மலஜலம் கழித்தும், சிகரெட், பீடி, புகைப்பதும் அறுந்து போன செருப்புக்களை ஆங்காங்கே தூக்கியெறிவதும் குடிப்பதும், குளிக்கும் தண்ணீரிலேயே அசுத்தங்கள் செய்தும் இந்தக் காட்டின் புனிதத்தையே கெடுத்து விட்டார்கள்.



கோரக்கர் குகை

இங்கு வரும் பக்தர்களில் நூத்துக்கு இருபது பேர் மட்டுமே உண்மையாக சாமி கும்பிடுவதற்காக வருகிறார்கள். மீதி எண்பது பேர்கள் சும்மா பொழுது போக்கிற்கு மட்டுமே வருகிறார்கள்.

இதனால் இங்கு காட்டு மிருகங்களின் அமைதி குலைந்து போவதோடு உண்மையாக பக்தியோடு வருபவர்களும் பலவித துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். இயற்கைச் சூழலும் மாறி வருகிறது. முன்பெல்லாம் வற்றாத நீரையுடைய ஓடைகளாய் காட்சியளித்த பெரும்பாலான நீர்நிலைகள் வறண்டு போய்விட்டன. நிலைமை இப்படியே போனால் இந்தக் காட்டுப் பகுதியும் வளங்குன்றிய பொட்டல் வெளியாய் மாறினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்று கூறி முடித்தார்.

அவரது தயக்கத்திற்கான காரணமும் ஆதங்கத்திற்கான காரணமும் புரிந்தது. என்ன செய்ய? எல்லோரும் பக்தியுடன் புனிதயாத்திரை மேற்

## ஆன்மீகம் 39

கொள்ள வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். ஆனால்....?

சரி போகட்டும் அம்மா, நாங்கள் உண்மையாலுமே பக்தியைப் பரப்புவதற்காகத்தான் இந்த நூலை எழுதுகிறோமே ஒழிய வேறு வியாபார நோக்கம் எதுவுமில்லை என்று தெரிவித்தோம்.

அந்தப் பெண் சித்தரும், நல்லது, நோக்கம் நல்ல நோக்கம் தான். இங்க பார்க்கவும் தெரிஞ்வுக்கவும் நிறைய இருக்கு. மேலே போய் எல்லோர் கிட்டேயும் பேசு. ஆனா எழுதப் போறேன்னு சொல்லிடாதே. அப்படிச் சொல்லி விட்டால் ஆளாளுக்குக் கதைவிட ஆரம்பிச்சிடுவாங்க. கேட்கும் செய்திகளில் நாலும் கலந்துதான் இருக்கும். அதை அப்படியே எழுதக்கூடாது. நீங்க பார்த்த, நீங்க உணர்ந்ததை மட்டும் எழுதுங்கள்.

கீழே இறங்கி வரும்போது நிறையச் சொல்றேன். சாவகாசமாக எழுதிக்கலாம். போய்வாங்க என்றார்.

சரிங்க அம்மா, உங்க பேரையாவது சொல்லக்கூடாதா?

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



51

### மேராநாம் அப்துல் ரஹ்மான்

பங்களாதேஷ் அமைத்த முஜிபுர் ரஹ்மானின் பெயர் நாடெல்லாம் பரவிய நேரம். அவரது வரலாற்றைப் படித்த செம்மல் அதே கேரக்டர் வைத்த ஒரு கதை கேட்டார். அதற்கு மக்கள் என் பக்கம் என்று பெரும் வைக்கச் சொன்னார்.

அப்போது ஜன்ஜீர் என்ற படம் வந்தது. அதையும் பார்த்தார். அதை உரிமை வாங்கி உதயம் புரடக்ஷன்ஸ் எடுக்க முயன்றார்.


அப்படத்தில் முஸ்லிம் வேடம் தாங்கிய நடிகர் பிரான் ரோல் செம்மலைக் கவர்ந்தது.

அதை மட்டும் செய்தால் மக்களுக்கு பிடிக்காது என்றார். இன்ஸ்பெக்டர் நாயகனாகவும் அவனுக்கு நண்பனாக இந்த முஸ்லிம் பாத்திரத்தையும் ஏற்று நடிக்க இசைந்தார்.

உறவில்லை இருவருக்கும். நட்பால் கட்டுப்பட்டவர்கள். அந்த இரு பாத்திரத்தில் அன்புப் பிணைப்பாகவே ஜன்ஜீர் (சங்கிலி) என இந்தியில் பெயர் வைத்தனர்.

தமிழில் சிரித்து வாழ வேண்டும் என்று பெயரிடப்பட்டது.

அந்தப் படத்துக்கு இயக்குநராகப் பல பேர்களை சொன்னதும் வேண்டாம் ஜெமினி அதிபர் வாசன் அவர்களின் மகன் பாலுவே இயக்கட்டும் என்றார். இதற்கு இரண்டு காரணங்களைச் சொன்னார்:



ராஜகுமாரி படத்தில் எம்.ஜி.ஆர்

சந்திரலேகா படம் பார்த்து [illegible] இயக்க நான் சிலதை வாசன் அவர்கள் [illegible] சந்தர்ப்பமும். சந்திரலேகா மாதிரி படம் கிடைக்காதா என்று ஏங்கினேன். பெரிய செலவில் அபூர்வ சகோதரர் அவர்கள் ஸ்தாபனத்தில் எனக்கும் படம் கிடைத்தது- ஒளி விளக்கு அதை அவர் இயக்கவில்லை. சாணக்கியாவை நியமித்தார். காரணம் கேட்களையே திரும்ப எடுக்க ஆசை. அதை நான் இயக்க இருக்கிறேன் என்று வாசன் அவர்கள் சொன்னார். அதற்கு நான் கொடுத்து வைக்கலே. அதற்காக இந்தப் படத்தில் ஒரு டுயல் ரோல் வச்சு, அவர் மகனை இயக்கச் சொல்கிறேன்.

அப்பாவிடம் செய்ய இருந்த வேலையை மகனிடம் செய்யும் அளவுக்கு நான் இருப்பது, எனக்கு ஒரு பெருமை.

அடுத்தது மணியன், வாசன் அவர்களிடம் வளர்ந்தவர். அவர் தன் முதலாளிப் பிள்ளைக்கு வேலை கொடுப்பது ஒரு நன்றிக்கடன். அதற்கு மணியன் கடமைப்பட்டவர் என்றார்.

#### பிரசாதம்

எல்லா ஜீவராசிகளும் உண்பதற்குத் தன் தலையை வணங்கியே தீர வேண்டும். மனிதனாகிய உனக்கு கைகளை தந்திருக்கிறோம். உன் வாய்க்கு அக்கைகள் உணவைக் கொண்டு வரும். நீ வணங்குவது எமக்காக மட்டும் இருக்கட்டும்- திருமறையின் இந்த வாக்கியம் செம்மலுக்கு மிகவும் பிடித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பில்லாமல் செயற்படும் அரசு ஆட்சியைவிட்டு விலகட்டும்

## சிங்கள ராவய அமைப்பு கர்ஜிப்பு

மாடறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிங்கள ராவய பௌத்த அமைப்பினால் முன்னெடுத்துவரும் எதிர்ப்புப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தினை கிழித்தெறிந்ததுடன் மோதலிலும் சிங்கள ராவய அமைப்பின் தேரர்கள் ஈடுபட்டனர்.

நாட்டில் மாடறுப்பதனை உடனடியாக நிறுத்தாவிடின் எமது சத்தியாக்கிரக போராட்டம் தொடர்வதோடு உயிர்த்தியாகத்தை செய்யவும் தயார் எனவும் குறித்த அமைப்பு எச்சரித்துள்ளது.

மாடறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிங்கள ராவய பௌத்த அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்புப் போராட்டமானது நேற்று முன்தினம் தொடர்ந்ததுடன் பெரும் மோதலிலும் ஈடுபட்டனர். கடந்த ஒரு வார காலமாக மாடறுப்பதற்கு எதிராக பாதயாத்திரையினை மேற்கொண்டு வந்த சிங்கள ராவய பௌத்த அமைப்பினர் தமது போராட்டத்திற்கான உடனடித் தீர்வினையும் ஜனாதிபதியுடன் கோரியிருந்தனர்.

இந்நிலையில் அவ்வமைப்பின் கோரிக்கைக்கேற்ப ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கடிதம் வழங்கப்பட்ட போதிலும், அக்கடிதத்தில் தமது கோரிக்கைக்கான தீர்வு உள்ளடக்கப்படவில்லை என கடிததத்தினை கிழித்தெறிந்ததுடன், பொலிஸாருடனான வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர்.

இதனிடையே இனந்தெரியாத நபர்கள் சிலர் பௌத்த தேரர்களுடன் முரண்படவும் இரு தரப்பினரிடையேயும் மோதல் உண்டானது.

இதனையடுத்து தமது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் வரையில் நாம் தொடர்ந்தும் சத்தியாக்கிரக போராட்டத் தினை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சரியான தீர்வு வராவிடின் தாம் தீக்குளிக்கப் போவதாகவும் சிங்கள ராவய பௌத்த அமைப்பினர் எச்சரித்துள்ளனர். இது தொடர்பில் சிங்கள ராவய பௌத்த அமைப்பின் தலை வர் ஹக்மீமன தயாரத்தன தேரர் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் எம்மை ஏமாற்றிவிட்டது. எமது கோரிக்கைகள் ஜனாதிபதிக்கு நகைச்சுவையாக மாறிவிட்டது. நாம் குறிப்பிடுவது இந்த நாட்டின் பாரம்பரியத்தினை காப்பாற்றும் விடயம். இன்று நாட்டில் முஸ்லிம் தீவிரவாதிகள் பௌத்த கொள்கையினையும், நாட்டின் தொன்மையினையும் அளிக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அரசாங்கம் அவை தொடர்பில் கவனம் செலுத்தாதுள்ளது. நாட்டில் தமிழர் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படும்போது சர்வதேச அளவில் குரல் கொடுக்கின் றனர். முஸ்லிம்கள் தொடர்பில் மத்திய கிழக்கு நாடுகள் குரல் கொடுக்கின்றது. ஆனால் சிங்களவர்களுக்கு ஒன்றென்றால் யாரும் வருவதில்லை. அரசாங்கம் கூட எமக்காக குரல் கொடுக்க முன்வர வில்லை.

இந்நாட்டு பௌத்தர்களை யார் காப்பாற்றுவது. எமக்காக யார் குரல் கொடுப்பது. எமது இனம் இன்று எவராலும் மதிக்கப்படாத இனமாக மாறிவிட்டது. சிங்கள அரசாங்கம் கூட சிங்களவர்களை கவனத்திற் கொள்ளவில்லை. இன்று நாம் விடுத்துள்ள கோரிக்கைக்கு காதல் கடிதம் எழுதுவதுபோல் அரசாங்கம் பதில் தெரிவித்துள்ளது. அரசாங்கம் பொறுப்பில்லாது செயற்படுமாயின் உடனடியாக ஆட்சியினை விட்டு விட்டு பௌத்தத்தினை நேசிக்கும் நபருக்கு ஆட்சியமைக்க அனுமதிக்க வேண்டும்.

இன்று எமக்கான தீர்வு கிடைக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் கால அவகாசம் வழங்கப்பட முடியாது. எமக்கு இன்று ஒரு தீர்வு இல்லையேல் நாம் எமது உயிர்களை பௌத்தத்திற்காக தியாகம் செய்வோம். இவ்விடத்திலே தீக்குளிப்போம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## பொதுவேட்பாளராக பிக்குவை நிறுத்துங்கள்

### பொதுபலசேனா கோரிக்கை

பௌத்த பிக்கு ஒருவரை பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தினால் ஆதரவளிக்கத் தயார் என பொதுபல சேனா அமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் திட்டம் தொடர்பில் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.


எனினும், குறித்த பௌத்த பிக்கு ஏனைய மத அமைப்புக்களின் தலையீடுகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என பொதுபலசேனா அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடுவது குறித்து மாதுலுவே சோபித தேரர் ஆராய் ந்து வருவதாகத் தமக்கு தகவல் கிட்டியுள்ளது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

மாதுலுவே சோபித தேரர் மேற்குலக நாடுகள் மற்றும் கிறிஸ்தவ அழுத்தங்களின்றி செயற்பட்டால் பூரணமாக ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளத் தவறினால், மாதுலுவே சோபித தேரருக்கு எதிராக பிரசாரங்களில் ஈடுபட நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட்டு, பாராளுமன்ற ஆட்சி முறைமை ஒனறை நிறுவும் வரையில் ஆட்சிப் பொறுப்பை வகிக்கத் தயார் என மாதுலுவே சோபித தேரர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



ஜோசப்பாலாவின் உளம் மகிழ உளசமூக கட்டுரைத் தொகுப்பு அண்மையில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றபோது.

## வடக்கு முதல்வர் தாய்நாட்டை காட்டிக் கொடுக்கின்றார்

### பொதுபலசேனாவின் கருத்து இது

அரசாங்கத்தின் மீதுள்ள பழிவாங்கல்களுக்காக தாய் நாட்டையே காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டினையே விக்னேஸ்வரன் செய்கின்றார். சர்வதேசத்திற்கு விலை போகும் விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்ய வேண்டும் என பொதுபலசேனா பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுபலசேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாண சபைக்கும் முதலமைச்சருக்கும் போதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டும் பிரச்சினைக்கு தீர்வுகாண இவர்கள் முயற்சிக்கவில்லை. நாட்டை பிரித்து தனி ஆட்சி நடத்தவே கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் முயற்சிக்கின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அரசாங்கத்தின் மீதும், இராணுவத்தின் மீதுமே தனிப்பட்ட கோபம் உள்ளது. அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பினருக்கும் இடையே உள்ள விரோதத்தினால் முழு நாட்டையும் பழிவாங்கிவிடக்கூடாது. இன்று வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன ஆகியோர் சர்வதேசத்தின் கையாளாகவே செயற்படுகின்றனர்.

அரசாங்கத்திற்கும், முழு நாட்டிற்கும் எதிராக சர்வதேசத்தினையே திருப்பி, தேசத்துரோகத்தில் ஈடுபட்டு வரும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்ய வேண்டும். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடை செய்து அவர்களின் செயற்பாட்டினையும் தடை செய்ய வேண்டும்.

மேலும் வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர் வட மாகாண சபைக்கும், முதலமைச்சருக்கும் போதுமான அளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. வடக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடிந்தும் அவர்கள் அவை எவற்றினையும் விரும்பவில்லை என்பதுவே உண்மை. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களையும் தடுத்து அவர்களின் சுய விருப்பங்களுக்காக வடக்கு மக்களை பயன்படுத்துகின்றனர் என்பதே உண்மை.

அன்று வடக்கு மக்கள் பொருளாதார ரீதியிலோ கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலோ வாழவில்லை. அவர்களின் மனநிலை நன்றாகவேயுள்ளது. எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், விக்னேஸ்வரனும சேர்ந்து மக்கள் மனதில் பிரிவினைவாதத்தினை தூண்டுகின்றனர்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடையே ஓர் விதத்திலும், அரசாங்கத்திடம் இன்னோர் விதத்திலும் சர்வதேசத்திடம் வேறொரு விதமாகவும் கருத்துக்களை முன்வைக்கின்றார். ஓர் நாடாக செயற்பட்டு நாட்டை ஒற்றுமைப்படுத்தும் எண்ணம் ஒருபோதும் கூட்டமைப்பினருக்கு கிடையாது.

நாட்டை பிரித்து வடக்கினை தனி அரசாக மாற்றி தனி ஆட்சி நடத்தவே இவர்கள் அனைவரும் முயற்சிக்கின்றனர். ஜெனீவா தீர்மானம் கொண்டு வரவும் கூட்டமைப்பே காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## பாராளுமன்ற அமர்வு ஒளிபரப்பு இரத்தானது

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அச்சுறுத்தல் காரணமாக நேரடி ஒளிபரப்பு இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் செய்மதி தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நாடாளுமன்ற அமர்வுகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டு வந்தது.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழுத்தம் காரணமாக நேரடி ஒளிபரப்பு இரத்து செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேரடி ஒளிபரப்பைச் செய்த பியோ ரிவி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சிய நிறைவேற்றுப் பணிப்பாளர் நேரடி ஒளிபரப்பை இரத்து செய்துள்ளார்.

பணம் பெற்றுக் கொள்ளாமல் இந்த நிறுவனம் நேரடி ஒளிபரப்பைச் செய்திருந்தது. மீளவும் நேரடி ஒளிபரப்பை ஆரம்பிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது என சபாநாயகர் தெரிவித்துள்ளார். (அ-2)

## 100 பேரிடம் பணமோசடி

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகத் தெரிவித்து 100 பேரிடம் பணம் மோசடிசெய்த தொழில் முகவர் நிலையமொன்று தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள தொழில் நிறுவனமொன்று தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிறுவனத்திற்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் பாதுகாப்பு பிரிவில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாகத் தெரிவித்து குறித்த நிறுவனம் சுமார் 100 பேரிடம் பணம் அறவிட்டுள்ளது.

இது தொடர்பில் கண்டறியுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியா இலங்கையின் நண்பன் என்ற கருத்தை மாற்ற வேண்டும்

## ஆங்கில இணையத்தளம் தகவல்

**இந்தியா இலங்கையின் நண்பன் என்ற கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தியா இலங்கையை பொறுத்தவரை ஒரு அரசியல் பங்காளி என்பதே உண்மையான விடயம் என்று ஆங்கில இணையத்தளம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.**

ஜெனீவாவில் அமெரிக்க பிரேரணைக்கு இந்தியா ஆதரவாக செயற்படப் போகிறது என்ற அடிப்படையில் இந்த கருத்தை சார்ல்ஸ் பெரேரா வெளியிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் கருத்துப்படி இந்தியா இலங்கையின் பெரிய சகோதரர் அல்ல என்பதை கட்டுரையாளர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய அரசாங்கம் இன்று தமிழகத்தை சார்ந்து அரசியல் கைதியாக மாறியுள்ளது.

இதன் காரணமாகவே தமிழ் இனவாதிகளான முன்னாள் முதல்வர் கருணாநிதி, தற்போதைய முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் கருத்துக்களுக்கு இந்திய மத்திய அரசாங்கம் முன்னுரிமை வழங்குகின்றது.

பல மாநிலங்களை கொண்ட இந்தியாவை பொறுத்தவரை இந்திய மத்திய அரசாங்கம் தமிழகத்தின் விருப்பங்களுக்கு மாத்திரம் செவிசாய்ப்பது கேள்விக்குரிய விடயம்.

இந்தியா கடந்த காலங்களில் இலங்கைக்கு சார்பாக நடந்து கொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தில் 40ஆயிரம் இலங்கை படையினர் விடுதலைப் புலிகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருந்த போது கப்பலை அனுப்ப இந்தியா மறுத்தது.

தற்போதைய இந்திய அரசாங்கம் அவ்வாறு செயற்படும் போது பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தமிழக இனவாதியான வை.கோபாலசாமியின கோரிக்கைக்கு ஏற்ப இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவியை செய்யாது என்று உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் போரின் போதும் இந்தியா ஆயுத உதவிகளை இலங்கைக்கு வழங்கவில்லை. சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளே இலங்கைக்கு உதவின.

இன்று இந்தியா, அமெரிக்காவுக்கு துணைபோய் நிற்கிறது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னணியில் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கும் பங்குண்டு.

எனினும் இன்றும் இந்திய மத்திய அரசாங்கம் தமிழகத்தின் கைப்பொம்மையாக செயற்படுகிறது.

இலங்கையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை 100 வீத அடிப்படையில் செயற்படுத்தினாலும் அமெரிக்கா திருப்திப்படப் போவதில்லை.

அமெரிக்காவை பொறுத்தவரை வடக்கையும் கிழக்கையும் தனியாக பிரித்து தமது தளமாக இலங்கையை பயன்படுத்துவதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாகவுள்ளது.

இதன் மூலமே ரஷ்யா மற்றும் சீனாவின் பிராந்திய ஆதிக்கத்தை அமெரிக்காவினால் கட்டுப்படுத்த முடியும்.

எனவே இதற்கு துணை போகும் இந்தியாவை நட்பு நாடு என்று கூறுவதை இனி இலங்கை கைவிட வேண்டும் என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)


பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவுச்சங்கத்தின் 13 ஆவது ஆண்டுப்பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாக சபைத்தெரிவு இடம்பெறும்.

அத்துடன் பொதுக்கூட்டப் பிரதிநிதி தெரிவு புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளல் என்பன நடைபெறும்.

எனவே நிதியத்தின் உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக இணைய விரும்புபவர்கள் ஓய்வூதிய அட்டை, தேசிய அடையாள அட்டை என் பன வற்றுடன் சமுகமளிக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார். (அ-2)



நல்லூர் பிரதேச செயலக கலை இலக்கியப் பேரவை நடத்திய இலக்கிய விழாவில் கலை ஞானச் சுடர் எனும் விருதை நாவற்குழி சு.சிவராசா பெற்றுக் கொள்வதையும் விழாவில் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களையும் படங்களில் காணலாம்.

## யானைகள் அச்சுறுத்தும் பிரதேச செயலகங்களுக்கு ஒரு கோடி ரூபா

(மட்டக்களப்பு)

யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகியுள்ள பிரதேசங்களில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் தலா ஒரு கோடி ரூபா ஜனாதிபதியால் ஒதுக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளின் தாக்குதலை தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கான கூட்டம் கடந்த திங்கட்கிழமை அமைச்சர் தலைமையில் மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறிய அமைச்சரால் பல பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யானைகளின் தாக்குதலுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை அவ்வப் பிரதேச செயலாளர்கள் தமது பணத்தில் உடனடியாக வாங்க வேண்டும் என்றும் இப்பணத்தைப் பின்னர் வன ஜீவராசிகள் திணைக்களம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் அனுமதி வழங்கினார்.

மின்சார வேலிகளை அமைப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் கூட்டங்களைக் கூட்டி வேலி அமைப்பதற்கான தீர்மானங்களை எடுத்து நிறைவேற்ற வேண்டும்.

மேய்ச்சல் தரைக்குரிய காணியை அடையாளப்படுத் தினால் அமைச்சின் மூலமும் மகாவலித் திட்டத்தின் மூலமும் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

யானை வரும் வழிகளில் பனை மரங்களை நாட்டுமாறும் அதற்குத் தேவையான நிதியை பனை அபிவிருத்தி சபையின் மூலமாக வழங்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் உறுதியளித்தார். (அ-2)

## அகளங்கனுக்கு மணிவிழா

பெரும் புலமையாளரும் நவீனத்துவ சிந்தனையாளருமாகிய ஸ்கந்தவரோதயன் கலாநிதி அகளங்கனின் மணிவிழா சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், திருமதி மீனா சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கல்லூரி அதிபர் இ. ஈஸ்வரதாசன், ஆசிரியர் எஸ்.மோகன்ராஜ், கலாநிதி ஆறு. திருமுருகன், சிற்பி சிவசரவணபவன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் செ.கிருஷ்ணராசா அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் சுரா புவனேஸ்வரன், ஸ்கந்தவரோதயன் திருமதி யோகா தேவி ரவிக்குமார், விரிவுரையாளர் எம்.கௌரி காந்தன் ஆகியோரின் உரைகள் இடம்பெறும்.

மணிவிழா வாழ்த்துப்பாடலை விரிவுரையாளர் ஸ்ரீமதி விக்னேஸ்வரி நரேந்திரா இசைப்பார். (அ)

# ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் ஐ.தே.கட்சிக்கு கிடையாது

## அசாத் சாலி சுட்டிக்காட்டு

(கொழும்பு)


எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மேடை பிரசாரங்களிலும் கலந்து கொள்வதில்லையென மத்திய மாகாண ஐ.தே.க.உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இந்த மாகாண சபைத் தேர்தலின் மூலம் ஐ.தே.கவுக்கு மக்கள் நல்லதொரு பாடமொன்றை புகட்டுவாரெனவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய மாகாண சபையின் கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஐ.தே.கவினது திட்டமிடப்படாத சீரற்ற கட்டமைப்புகளின் காரணமாக தொடர்ச்சியான பலவீனங்கள் இடம்பெற்று வருவது யாரும் அறிந்த உண்மை. அது போன்றுதான் கொழும்பு, கம்பஹா, களுத்துறை போன்ற மாவட்டங்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை குறைத்தது மட்டுமல்லாது கடந்த தேர்தல் காலங்களில் தொடர்ச்சியாக தோல்விகளை அனுபவித்து வருபவர்களுக்கு அக்கட்சி மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் அளித்து வருகின்றது.



ஆகவே ஐ.தே.கவிலிருந்து யாரும் ஜனாதிபதியாக வரவேண்டுமென்றோ அல்லது ஆட்சியை கைப்பற்ற வேண்டுமென்ற எந்த பொறுப்புணர்ச்சியுமில்லை என்பது கட்சியின் செயற்பாட்டில் தெளிவு பெற வேண்டியுள்ளது.

தலைவருக்கும் தலைமைத்துவ சபைக்கும் தேவையான்வர்களை உள்வாங்குவதால் கட்சியின் முன்னேற்றத்தை காணமுடியாது மாநகர தேர்தலில் வெற்றி பெறும் அபேட்சகர்களை முன்நிறுத்த வேண்டும். இவ்வாறு தற்போது பல பிரச்சினைகளுக்கு ஐ.தே.க உள்வாங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தற்போது நடைபெறப் போகும் மாகாண சபை தேர்தலில் எமது தேசிய ஐக்கிய முன்னணி கட்சி மட்டுமல்லாது முஸ்லிம் சமூகத்தை ஐ.தே.க. உரிய மதிப்பளிக்காமல் நிராகரித்து வருகின்றது.

ஆகவே நான் ஐ.தே.கவில் இணைந்திருந்தாலும் கட்சி விடும் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலிருந்து நான் தயங்க மாட்டேன் எனவும் ஜனாப் அசாத் சாலி மேலும் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆம் ஆத்மி பதவி விலகல்!

# பதறுகிறது பா.ஜ.க.




பதவியை இராஜினாமா செய்த சமயத்தில் கேஜ்ரிவால் தனது ஆதரவாளர்களிடையே ஆற்றிய உரையில் "கடவுளே, நாங்கள் சாதாரணமானவர்கள், எங்களுக்கு கருணை காட்டுங்கள், வழி நடத்துங்கள் என வேண்டிக் கொள்கிறேன். இந்த நாட்டுக்காக எங்கள் உயிர்களை தியாகம் செய்வதற்கான வலிமையை எங்களுக்கு அருளுங்கள் என வேண்டிக் கொள்கின்றேன்" என குறிப்பிடப்பட்டுள்ளார்.

கேஜ்ரிவாலின் இராஜினாமாவும் அவரது சத்யாவேசம் பொங்கும் உரையும், அதன் இறுதியில் செண்டிமெண்டலாக ஒரே போடாக போட்டுத்தாக்கியிருப்பதும் அவரது டிஆர்.பி. ரேட்டிங்கை கணிசமாக உயர்த்தியிருக்கிறது. சமூக வலைத் தளங்களிலும் முதலாளித்துவ ஊடகங்களிலும் நடந்த விவகாரங்கள் குறித்த விவாதங்களில் கேஜ்ரிவாலின் மேல் பகுத்தறிவற்ற ஒரு பச்சாதாப உணர்ச்சி மேலோங்கி வருகிறது.

டில்லி தேர்தலில் 28 இடங்களை வென்று காங்கிரசின் தயவோடு ஆட்சியில் அமர்ந்த கேஜ்ரிவால், துவக்கத்திலிருந்தே டில்லி மக்களின் அன்றாட சவால்களைத் தீர்க்க முடியாது என்பதை தெளிவாக உணர்ந்திருந்தார்.

அதனால்தான் இந்த 49 நாட்களில் தனது டி.ஆர்.பி. ரேட்டிங்கை எப்படியெல்லாம் ஏற்றுவது என்பதில் தான் அவரது கவனம் இருந்தது. இலவச குடிநீர் மற்றும் மின் கட்டண அறிவிப்பை நெருக்கமாக அலசிப் பார்த்தாலே அவரது நோக்கத்தை புரிந்து கொள்ள முடியும். அந்த அறிவிப்புகளால் கேஜ்ரிவால் தலைப்புச் செய்திகளில் அடிபட்டதைத் தவிர மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதே யாதார்த்தமான உண்மை.

கடைசியாக கடந்த வாரம் தனது பிரம்மாஸ்திரமான ஜன்லோக்பாலை ஏவியிருக்கிறார். டில்லி மாநில சட்டசபையில் ஜன்லோக்பால் மசோதாவை நிறைவேற்ற விடாமல் காங்கிரசும் பாரதிய ஜனதாவும் எதிர்த்து வாக்களிக்கின்றன. இதற்குக் காரணம் அதற்கு இரண்டு நாட்கள் முன் தனது அரசு முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் கே.ஜி பேசினில் எடுக்கப்படும் இயற்கைஎரிவாயுக்கு அதிகவிலைவைத்து டில்லியில் விற்கப்படுவதற்கு எதிராக வழக்குப் பதிவு செய்தது தான் என்று சொல்லும் கேஜ்ரிவால், காங்கிரசும் பாரதிய ஜனதாவும் அம்பானிகளால் இயக்கப்படும் பொம்மைகள் என்றும் அதனால்தான் ஜன்லோக்பால் மசோதாவை நிறைவேற்ற விடாமல் இவ்விரு கட்சிகளும் கைகோர்த்துக் கொண்டன என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார். முகேஷ் அம்பானிக்கு எதிராக வேறு ஒரு மாநிலத்தில் நடக்கும் எரிபொருள் துரப்பண நடவடிக்கையின் மூலம் ஏமாற்றப்படுவதை எதிர்த்து கொந்தளிக்கும் இதே கேஜ்ரிவால், தனது சொந்த மாநிலமான டில்லியில் மக்களின் தலையில் மின்சாரத்தின் பெயரில் மிளகாய் அரைக்கும் அனில் அம்பானிக்கு எதிராக இதே பரிணாமத்தில் பொங்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

ஜன்லோக்பால் மசோதாவை நிறைவேற்றுவதற்காக எந்த எல்லைகளுக்கும் தாம் செல்லத் தயார் என்றும், இதற்காக தனது அரசே போனாலும் பரவாயில்லை என்றும் அறிவித்துள்ள கேஜ்ரிவால் தற்போது தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதோடு டில்லி அரசைக் கலைக்க கோரி மாநில ஆளுநரிடம் கடிதத்தையும் வழங்கியுள்ளார்.

சட்டமன்றத்தின் அதிகாரம் என்பது ஒரு கொலு பொம்மையின் அதிகாரம் என்பது கேஜ்ரிவால் அறியாத இரகசியம் அல்ல. கேஜ்ரிவாலே எழுதியிருக்கும் சுயராஜ்ஜியம் நூலில், சட்டமன்றம் பாராளுமன்றம் உள்ளிட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்தின் அங்கங்களுக்கு வெறுமனே சட்டமியற்றும் அதிகாரமும் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கும் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் இருப்பதாகவும், அரசின் அங்கங்களான அதிகார வர்க்கத்தினருக்கே முழுமையான அதிகாரங்கள் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இது எதுவும் அவரது சொந்த கண்டுபிடிப்பல்ல. மார்க்சிய லெனினிய இயக்கங்கள் வெகு காலமாக தமது திட்டங்களிலும் ஆவணங்களிலும் குறிப்பிடுபவைதான். மேலும் இதற்கான தீர்வாக இந்த அமைப்புக்குள்ளேயே மொக்கையான சீர்திருத்த நடவடிக்கைகளாகத்தான் கோருகிறார். அதன்படி இதற்கும் மாலெ இயக்கத்தின் திட்டத்திற்கும் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை.

தலைநகர் டில்லி, ஹரியானாவின் குர்காவ்ன், உத்திர பிரதேசத்தின் காஜியாபாத் மற்றும் நோய்டா உள்ளிட்ட பகுதிகளோடு சேர்த்து தலைநகர் பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது. இது முழுமையான மாநில அந்தஸ்து பெற்ற பிரதேசம் அல்ல. அரசியல் சாசனத்தின் படி, யூனியன் பிரதேசங்களுக்கான உரிமைகளோடு மேலதிகமாக சில விசேட உரிமைகளைக் கொண்டிருக்கும் பிரதேசமாகும்.

சாதாரணமாக ஒரு மாநில சட்டமன்றம், ஒரு சட்டத்தை நிறைவேற்றும் பட்சத்தில் அந்த சட்டம் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள அதே பொருளிலான சட்டத்தோடு முரண்படுமானால், பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டமே இறுதியாக செல்லும். டில்லி யூனியன் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில், பாராளுமன்றம் ஒரு குறிப்பிட்ட அம்சத்தின் கீழ் நிறைவேற்றும் சட்டத்தோடு முரண்படாமல் சட்டமியற்றிக் கொள்ளும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஒருவேளை முரண்படும் பட்சத்தில், பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டமே இறுதியாக செல்லும்.

மேலும், டில்லி சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்ட மசோதாக்களை அம்மாநிலத்தின் லெப்டினெண்ட் கவர்னர் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே நிறைவேற்ற முடியும். இது யூனியன் பிரதேசங்களை மத்திய அரசு கட்டுப்படுத்த வைத்திருக்கும் அயோக்கியத்தனமான ஒரு சட்டவாத நடைமுறை. தற்போதைய ஜன்லோக்பால் மசோதா விவகாரத்தில், லெப்டினெண்ட் கவர்னர் நஜீப் ஜங் ஏற்கனவே இந்த நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்கிற அடிப்படையில் மசோதா தாக்கலாவதற்கு எதிரான அறிக்கையை டில்லி சட்டமன்றத்திற்கு வைத்திருக்கிறார். இந் நிலையில் அம்மாசோதாவை அறிமுகம் செய்து நிறைவேற்றுவது இந்திய சட்டவாதத்திற்கு உட்பட்டே இயலாத காரியம் என்பதே உண்மை.

எதிர்பார்த்தபடியே மசோதா தோற்கடிக்கப்படுகிறது. இதில் பா.ஜ.கவும், காங்கிரசும் கை கோர்த்துள்ளமைக்கு ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதமான அணுகுமுறையே காரணம். ஊழல் ஒழிப்பு குறித்த பெயருக்காவது ஆம் ஆத்மி பெயர் எடுக்க கூடாது என்பது அவர்களின் எண் ணம். ஒருக்கால் அவர்கள் எதிர்க்கவில்லை என்றாலும் இது சட்டமாவது இயலாத ஒன்று. கேஜ்ரிவாலின் இராஜினாமாவைத் தொடர்ந்து கவர்னர் சட்டமன்றத்தைக் கலைக்காமல் முடக்கி வைக்கிறார். உடனே இதெல்லாம் தனக்குத் தெரியவே தெரியாது என்பது போல் நடிக்கும் கேஜ்ரிவால், கவர்னர் காலனிய காலத்து வைசிராய் போல் செயற்படுவதாக அங்கலாய்த்துள்ளார்.

ஆக, அவர் டில்லியின் ஆட்சியதிகாரத்தை மேற்கொள்வது என்ற தீர்மானத்தை எடுக்கும் போதே அரசு இயந்திரத்தின் இயல்புக்கு மீறி இங்கே ஜனநாயகம் செல்லாது என்பதை அறிந்தவராகவே அவர் இருந்துள்ளார். என்றாலும், அவரே சுட்டிக்காட்டிய இந்த அமைப்பு முறைகளின் த்தனை போதாமைகளையும் மனதார ஏற்றுக் கொண்டு தான் பதவியில் அமர்கிறார் என்கிற பட்சத்தில் அதன் நடைமுறைகளுக்கும் சொல்லப்படும் மரபுகளுக்கும் அது கோரும் மதிப்பை அளிக்க வேண்டியது அவரது கடமையாகிறது.

தற்போது, தான் பாதிக்கப்பட்டுள்ளதாக செண்டிமெண்ட் நாடகங்களை அரங்கேற்றி வரும் கெஜ்ரிவால் இந்தப் பாதிப்பை முன் அனுமானித்தே பதவியில் அமர்கிறார். கெஜ்ரிவால்–அண்ணாஹசாரே கும்பல் ஊழல் ஒழிப்பு குறித்து அடித்த சவடால்களும், காங்கிரஸ் குறித்த அவர்களது பிரசாரங்களும் அத்தனை எளிதில் நமக்கு மறந்திருக்காது. அத்தனைக்கும் காரணம் சில ஊழல் அரசியல்வாதிகள்தான் என்று தனியார் மயம், தாராளமயம் மற்றும் அவற்றை முன்தள்ளும் கார்ப்பரேட் பகற்கொள்ளை நலன்கள் என்கின்ற முழுப் பூசணிக்காயை காங்கிரஸ் என்கின்ற மீந்துபோன பழைய சோற்றுக்குள் புதைக்க முற்பட்ட பிரசாரங்களை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். என்றாலும் அதே காங்கிரசின் ஆதரவோடு ஆட்சியில் அமர அவர் ஏன் முடிவெடுத்தார்?

ஏனெனில் அவரது நோக்கம் எல்லாம் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்தான். நிறைவேற சாத்தியமற்ற கவர்ச்சித்திட்டங்களே அறிவித்தது, அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் குறித்து வாய்திறக்க மறுத்ததில் தொடங்கி தற்போது காங்கிரசையும் பாரதிய ஜனதாவையும் ஒரே தராசில் தள்ளி எதிர்த்தராசை கவர முயற்சிப்பது வரைக்கும் அதைத்தான் துலக்கமாக உறுதிப்படுத்துகிறது. இராஜினாமா முடிவையும் பாராளுமன்றத் தேர்தலுக்கான தயாரிப்புக்களையும் கூட ஒரே நேரத்தில் துவங்கியிருப்பது தற்செயலானதல்ல. இதுதான் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவை எரிச்சலுக்குள்ளாக்கியிருக்கிறது. மோடிக்கும்பலே சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

இப்படியாக மோடியும் பாரதிய ஜனதாக் கட்சியினரும் தற்போது அண்டி கலங்கிப் போய்க்கிடக்கிறார்கள். டிசெம்பர் மாதம் நடந்த நான்கு மாநில சட்டமன்றத் தேர்தல்களில் 3 மாநிலங்களில் வென்ற பாரதிய ஜனதா, தனது வெற்றியைக் கொண்டாட முடியாமல் இஞ்சி தின்ற குரங்காக அவஸ்தைப்பட வைத்தது டில்லி மாநில தேர்தல் முடிபுகள்.

பெரும்பான்மைஉறுப்பினர்களை வென்றாலும் ஆட்சி அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர் எண்ணிக்கையைப் பெறமுடியவில்லை என்பதோடு ஆம்ஆத்மி கட்சி வென்ற 28 இடங்கள் பாரதிய ஜனதாவின் கண்ணில் இரத்தம் வடியவைத்து விட்டது. பாரதிய ஜனாதாவின் அதிர்ச்சி விலகுவதற்குள் ஆம் ஆத்மி கட்சியின் இலவசகுடிநீர் மற்றும் மின்கட்டண குறைப்பு குறித்த அறிவுப்புகள் ஒன்றுமாற்றி ஒன்றாக போட்டுத்தாக்கின. சில்லறை வணிகத்தில் அன்னிய மூலதனத்தை அனுமதிக்கமாட்டோம் என்ற ஆம் ஆத்மியின் பிரகடனம் வணிகர்களிடையே செல்வாக்காக இருக்கும் பாஜ.கவின் இடத்தை கேள்விக்குள்ளாக்கியது.

இப்படியாக பாரதிய ஜனதா கவலைப்படுமளவு அவர்களது ஆதரவுத்தளத்தை ஆம் ஆத்மிகட்சியின் செயற்பாடுகள் குறிவைத்துத் தாக்கியது. மேலும் தேர்தல் பரப்புரைகளுக்காக பாரதீய ஜனதா மேற்கொண்ட அதே வதந்திக் கம்பேனி உத்தியை ஆம் ஆத்மி கட்சியும் திறமையாக பயன்படுத்திக் கொண்டது. இணையம் மற்றும் ஊடகங்களில் வெளிச்சம் பெறுவது எப்படி என்கிற பாடத்தில் பாரதிய ஜனதா இளங்கலைப்பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தபோதே ஆம் ஆத்மி முனைவர் பட்டம் முடித்து விட்டிருந்தது. ஈவன்ட் மேனேஜ்மென்ட் எனப்படும் கலையில் கேஜ்ரிவால், மோடியை அசால்ட்டாக தூக்கி சாப்பிட்டு ஏப்பம் விடக்கூடியதாக இருந்தார்.


தற்போதைய ஜன்லோக்பால் மசோதா விவகாரத்திலும் பாரதிய ஜனதா நானும் ரவுடிதான், நானும் ஊழலுக்கு எதிரிதான் என்பதை நிரூபித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. ஜன்லோக்பால் மசோதா தாக்கலாவதை தாங்கள் எதிர்த்ததற்கும் அம்பானிக்கும் தொடபில்லை என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயம் பாரதிய ஜனதாவுக்கு ஏற்பட்டுள்ளது. ஒன்று அம்பானியைத் திட்டியாக வேண்டும், இல்லை வெண்டைக்காயை வெட்டி விளக்கெண்ணையில் கழுவிய கணக்காக ஏதாவது சப்பைக் கட்டு கட்டி வழிய வேண்டும் என்கிற நெருக்கடி பாரதிய ஜனதாவுக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், மசோதாவை எதிர்க்கும் போக்கில் காங்கிரசோடு பாரதிய ஜனதாவையும் இணை வைத்துப் பேசும் கேஜ்ரிவாலின் பரப்புரை ஏஜெண்டுகளையும் எதிர்கொண்டாக வேண்டும்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரை மோடிக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறி வருகிறது. எனினும் பாராளுமன்றத் தேர்தலில் எல்லா மாநிலங்களிலும் மோடி அலை இருக்காது, பிராந்திய கட்சிகளை வளைத்து மீண்டும் ஆட்சிக்கு வந்து விடலாம் என்பது அதன் கணக்கு. அதற்குத் தோதாக ஆம் ஆத்மி போட்டியிடும் தொகுதிகளில் வாக்குகளை பிரிப்பார்கள். பா.ஜ.க தள்ளாடும் என்று காங்கிரஸ் பெருச்சாளிகள் முதலில் மகிழ்ந்தார்கள். ஆனால், தற்போது காங்கிரஸ் பெருச்சாளிகள் போட்டியிடும் தொகுதிகளிலும் ஆம் ஆத்மியின் பிரபலங்கள் போட்டியிடுவதால் அது பா.ஜ.க.வுக்கு சாதகமாக அமையும்.

இந்த சூழ்நிலையில் மற்றுமொரு ஓட்டுக்கட்சியாக தனது அதிகாரத்தினை பெருக்கிக் கொள்ள ஆம் ஆத்மி துடிக்கிறது. டில்லி ஆட்சியை பணயம் வைத்து அவர்கள் பாராளுமன்றத்தில் ஒரு அலையை எழுப்ப முயல்கிறார்கள். அதற்குத்தான் இத்தனை அதிரடிக் காட்சிகள். அரசியலற்ற வலதுசாரி கொள்கைகளை வைத்திருக்கும் ஆம் ஆத்மி மற்ற இரு தேசிய கட்சிகளை விட ஆளும் வர்க்கத்தின் செல்லக் குழந்தையாக மாறுமா என்பதை இப்போது சொல்ல முடியாது. ஆனால், அடித்தளமோ, காரணங்களோ இல்லாத வெறும் ஊழல் எதிர்ப்பு என்ற ஒன்றை மட்டும் வைத்து ஒரு கட்சி எழ முடியுமென்றால் அதுவும் இந்திய ஜனநாயகத்தின் மகிமை தான்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அதிபர் தலைமையில் அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற போது....
(படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)









சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் ரி.சண்முகசுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வு கொடியேற்றி ஆரம்பிக்கப்படுவதையும், விருந்தினர்கள் அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிடுவதையும், வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.





கரவெட்டி யா/ ஞானாசாரியார் கல்லூரி 2014 இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றபோது...

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திர சர்மா போட்டியை ஆரம்பித்து வைப்பதையும் இடைவேளையின் போது நடைபெற்ற *கானமும் காட்சியும்* நிகழ்வையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.



## நிகழ்வின் நிழல்கள்

சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் அண்மையில் அதிபர் சி.தவநாயகம் தலைமையில் இடம் பெற்ற போது...
(படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேசத்திடம் முறையிடப்போவதில்லை

## அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள எந்தச் சமூகமும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான மார்க்கம் இலங்கையிலேயே உள்ளது என்பதில் முஸ்லிம் சமூகம அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிக்கும் அதேநேரம், இன்றைய காலகட்டத்தில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கும் கொண்டு செல்லும் அவசியம் இல்லை என்பதையும் உணர்ந்திருக்கின்றது என உற்பத்திவள ஊக்குவிப்பு அமைச்சா பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போர்வையில் முஸ்லிம்களையும், சர்வதேச இராஜதந்திர வலையில் இழுத்துவிட எடுக்கப்படும முயற்சிகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும தெரிவித்துள்ளதாவது,

அண்மைக் காலமாக இலங்கை முஸ்லிம்களுக்கு மத ரீதியிலான அசௌகரியங்கள் உள்ளன என்ற விடயத்தை பிரசாரப்படுத்தி, இலங்கை அரசுக்கு சர்வதேச அரங்கில் அபகீர்த்தி ஏற்படுத்துவதை முஸ்லிம் சமூகம் விரும்பவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மேற்குலகிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் இராஜதந்திரிகள், இலங்கை முஸ்லிம்கள் குறித்தும் ஆர்வமும், அக்கறையும் காட்டினாலும், இந்த இராஜதந்திரிகளில் பெரும்பாலானோர் தங்களது நாடுகளின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கியே செயற்படுகிறார்கள்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் முஸ்லிம்கள் பங்குபற்றாவிட்டாலும், அவர்கள் பாரியளவில் அவலங்களையும், உயிரிழப்புகளையும், உடைமையிழப்புகளையும் சந்தித்தவர்களாகவே இருக்கின்றார்கள்,

இத்தகைய கடந்தகாலப் பாதிப்புகளை பற்றி அன்று அக்கறைப்படாத சக்திகள், அண்மைக்காலமாக ஏற்பட்டிருக்கின்ற மத அசௌகரியங்களைப் பயன்படுத்தி, இலங்கை முஸ்லிம் சமுதாயத்தையும் இராஜதந்திரப் போரில் ஓரங்கமாக இழுத்துவிட முயற்சிக்கின்றன.

இந்நிலையில், இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் உள்ள பிரச்சினைகளையும், இறுதிக் கட்டப் போரின் நிகழ்வுகளையும் பயன்படுத்தியும், இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகக் கூறியும் எடுக்கப்படும் இராஜதந்திர முயற்சி எனும் வலையில் இலங்கை முஸ்லிம் சமூகம் விழுந்துவிடப் போவதில்லை.

இலங்கை முஸ்லிம்கள், கடந்த காலங்களில் தங்களுக்கிருந்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உலகின் முஸ்லிம் நாடுகளை நாடியிருக்கவுமில்லை, சர்வதேச சமூகத்தை வேண்டி நிற்கவுமில்லை.

தமிழ்த் தேசியத்தின் வன்முறை அரசியலின் மூலமாக ஏற்பட்ட பிரச்சினைகளின் போதும், பௌத்த தீவிரவாத சக்திகளினால் முஸ்லிம்களுக்கு அண்மைக்காலங்களில் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளின் போதும், இவை குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் உள்நாட்டு மட்டத்திலேயே பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவே முஸ்லிம் சமூகம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

நூற்றாண்டுகாலமாக இலங்கை முஸ்லிம் சமூக முன்னோடிகளும், அரசியற் தகைமையாளர்களும் நாட்டில் அவ்வப்போது தலைதூக்கிய பிணக்குகளுக்கு உள்நாட்டு மட்டத்திலேயே பேசித் தீர்வுக்கு வந்திருக்கின்றார்கள் என்பதை நடைமுறையாகவும் வரலாறாகவும் நாம் காண்கின்றோம்.

இத்துடன், இலங்கையின் ஜனநாயக நடைமுறைகளிலும், சமூகங்களுக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கைகளிலும். மூன்று இனங்களையும், உள்ளடக்கிய கனவான் தன்மையுடைய குடிமைச் சமூகத் தலைமைத்துவங்களிலும், இன்னும எஞ்சியிருக்கின்ற இனவாதமும், மதவாதமுமற்ற பெரும்பான்மையான அரசியற் தலைமைத்துவங்களிலும் இலங்கை முஸ்லிம் சமூகம நம்பிக்கை இழந்துவிடவில்லை.

குடியேற்ற முறைமைகளினால் வஞ்சிக்கப்பட்டு, நாடெங்கும் குடும்பங்களாகச் சிதறி வாழும் சிறுபான்மையினமான முஸ்லிம்கள் எந்தவொரு தருணத்திலும் வன்முறை அரசியல் உத்திகளைக் கடைப்பிடிக்கவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

பேச்சுவார்த்தைகள் முறிவடைகின்ற தருணங்களிலும் சமாதானத்திற்கான இன்னொரு முயற்சி என்பது. இலங்கையர்களுக்கிடையிலான மற்றுமொரு பேச்சுவார்த்தைதான் என்பதிலேயே முஸ்லிம் சமூகம் உறுதியாக இருந்திருக்கிறது.

இன்னும் தெளிவாகக் கூறுவதாயின், இலங்கையில் உள்ள எந்தச் சமூகமும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான மார்க்கம், இலங்கையிலேயே உள்ளது என்பதில் முஸ்லிம் சமூகம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கும் அதேநேரம் இன்றைய காலகட்டத்தில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லும் அவசியம் இல்லை என்பதையும் உணர்ந்திருக்கின்றது என அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-2)

# மண்ணில் மீட்கப்படும் எலும்புக் கூடுகள் குறித்து பௌத்த பிக்குகள் வாய் திறக்காதது ஏன்?

## பிரபாகணேசன் கேள்வி

அஹிம்சையை போதிக்கும் பௌத்த பிக்குகள் மன்னாரில் கிடைத்திருக்கும் மனித எலும்புக் கூடுகள் சம்பந்தமாக ஏன் அக்கறை கொள்ளவில்லை என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பௌத்த மதம் என்பது இந்து மதத்தில் இருக்கும் மூட நம்பிக்கைகளை அகற்றி இந்து மதத்தில் இருக்கும் புனிதமான விடயங்களை மட்டும் எடுத்துச் சென்று புத்த பகவானால் உருவாக்கப்பட்ட மதமாகும்.

இந்த புனிதமான பௌத்த மதத்தை போதிக்கும் இலங்கையிலுள்ள அநேகமான பிக்குகள் இன்று பாதையில் ஆர்ப்பாட்டம் செய்வ திலும் அடிதடிகளில் ஈடுபடுவதும் அரசியல் செய்வதிலுமேயே அக்கறை செலுத்துகின்றனர்.

இவர்களுக்கு பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது மக்களுக்கு தெரிய வேண்டும். இந்த நாட்டை முழு பௌத்த நாடாக மாற்றுவ தற்கான திட்டம் இதுவே.

முஸ்லிம் மக்களின் கலாசாரத்திற்கும் மதத்திற்கும் எதிராக பெரும்பான்மை இனத்தவரகளினால் அல்லது பௌத்த பிக்குகளால் நடத்தப்படும் நடவடிக்கைகளை தமிழ் அரசியல் தலைவர்கள் ஒரு போதும அனுமதிக்க கூடாது.

இன்று சிங்கள ராவயவினர் ஹெல உறுமய, பொதுபல சேனா போன்றவர்கள் பௌத்த மதம் இந்து மதத்துடன் ஒன்று பட்டது என கூறுகின்றார்கள்.

இதை நம்பி தமிழ் இந்துக்கள் முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதலை கண்மூடி பார்த்துக் கொண்டிருப்பார களேயாயின் நாளை எமக்கும் இதே கதி தான் ஏற்படப் போகின்றது.

ஆகவே இப்படியானவர்களுக்கு பின்னணியில் அரசாங்கத்திலுள்ளவர்கள் இருக்கின்றார்கள் என்ற நிலை இருந்தாலும் கூட அரச தரப்பு எதிர்த்தரப்பு என்று பாராமல் அனைத்து இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சிறுபான்மையின அரசியல் தலைவர்கள் அணிதிரள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இன்று மன்னாரிலும் திருகோணமலையிலும் கிடைத்திருக்கும் எலும்பு கூடுகளுக்கு இந்த ஆபத்தான அமைப்பினர் எப்படி பதில் கூற போகின்றார்கள் என பார்ப்போம்.(அ-2)

## வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட

# ஆறு பேருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரது மகன் ரவிந்து குணவர்த்தன உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் மொஹமட் சியாம் என்பவரை படுகொலை செய்த சம்பவம் தொடர்பில் இவ்வாறு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரினால், நீதிமன்றில் இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் 21ஆம தகதி மொஹமட் சிஹாம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

கடத்தி கொலை செய்தல், கொலைக்கு உதவி வழங்குதல், சூழ்ச்சி செய்தல, சாட்சியங்களை மூடிமறைத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மொஹமட் பவுஸ்டீன் மற்றும் கிருசாந்த கோரலகே ஆகியோர் உண்மையை ஒப்புக்கொண்ட காரணத்தினால் அவர்களை அரசாங்க சாட்சியாளர்களாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்த சட்ட மா அதிபர் தீர்மானித்துள்ளார்.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை நடத்தியிருந்தனர். (செ-11)

# நேபாள பிரதமருக்கு ஜனாதிபதி வாழ்த்து

நீண்டகால, முன்மாதிரியான அரசியல் வாழ்வின் மூலம் பெறப்பட்ட அனுபவம் பிரதமர் பதவிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேபாள புதிய பிரதமர் சுசில் கொய்ராலாவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்வதில் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்தில் அரசியல், அரசமைப்பு யாப்பின் வரலாற்றில் தீர்க்கமான ஒருகாலகட்டத்தில் உங்கள் நியமனம் நிகழ்ந்துள்ளது.

இக்கட்டத்தில் நேபாள மக்கள் உங்கள் தலைமைத்துவம் மீது வைத்துள்ள அங்கீகாரம் வெளியாகிறது. இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகால வரலாற்று பூர்வமான தொடர்புகள் காணப்படுகின்றன.

இலங்கை நேபாள உறவுகள் நெடுங்காலம் நிலவுகின்றன. இது கலாசாரம், மதப் பிணைப்பை அடிப்படையாகக் கொண்டது.

சார்க் அமைப்பின் ஊடாகவும் எம்மில் தொடர்புகள் அண்மைக் காலத்தில் வளர்ச்சி கண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.(அ-2)



பண்டத்தரிப்பு பற்றிமா பங்கின் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினரும் மறைக்கல்வி மாணவர்களும் இணைந்து வருடாந்த விளையாட்டுப் போட்டியின் விசேட நிகழ்வான மரதன் ஓட்டப் போட்டியை நடத்தினர். இதில் வணபிதா இயூஜின் பிரான்சிஸ் போட்டியை ஆரம்பித்தார். இந் நிகழ்வில் முதலாம் இடத்தை உகிளன்டியஸ் உதயனும் 2 ஆம் இடத்தை வி.பென்ற் கிறிஸ்ரின், 3 ஆம் இடத்தை சா.சதீஸ்குமாரும் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பாராளுமன்ற ஆறாவது அமர்வுகள்

(மானிப்பாய்)

ஸ்ரீலங்கா யூத்தின் 2ஆவது இளைஞர் பாராளுமன்றத்தின் ஆறாவது அமர்வுகள் நாளை வெள்ளி முதல் ஞாயிறு வரை நடைபெறவுள்ளது.

இவ் அமர்வில் சமாதானம், அபிவிருத்தி, மனிதவுரிமைகள்- தற்போதைய இளைஞர் தலைமுறை ஊடான சவால்கள் மற்றும் புதிய வாய்ப்புக்கள் என்னும் தலைப்பில் விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் அமர்வுகளின் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அளகப்பெரும கலந்து கொள்ளவுள்ளதுடன், அமர்வுகள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

அமர்வுகளில் பங்குபற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளைவெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மகரகம ஸ்ரீலங்கா யூத் மத்தியஸ்தானத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விவாதிக்கும் குழுக்கள் உடனடியாக அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாட்டுப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். (அ-9-23)

# நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த அரசு முயற்சி

## கருணாரட்ன கொதிப்பு

தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம்தொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில்,மக்கள் மத்தியில் கட்சிக்கும் தமக்கும் காணப்படும் நன்மதிப்பை சீர்குலைக்கும் நோக்கில் அரசாங்கம் திட்டமிட்டு சில சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருவதுடன், எம்மை ஊழல் மோசடிப் பேர்வழியாக அடையாளப் படுத்த அரசாங்கம் முனைப்புக் காட்டிவருகிறது

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்பதைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறு போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்க ஊடகங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதுடன், தொடர்மாடி வீடுகளை மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்து அரசாங்கம் வடக்கிலும், மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளிலும் காணிகளை அபகரித்து வருகிறது. (அ-2)

# செயற்குழு தெரிவு


(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் செயற்குழு தெரிவு இடம் பெற்றது.

இதன் பிரகாரம்: தலைவராக பஞ்சாட்சரம் ஞானபண்டிதன், உப தலைவராக நல்லதம்பி சசிதரன், செயலாளராக தம்பிராசா ஸ்ரீசெல்வம், உப செயலா ளராக செல்வரெத்தினம் ஜெயகாந் தன், பொருளாளராக தருமலிங்கம் அருணகிரிநாதன் ஆகியோர் தெரிவாகினர். (அ-2)


# பிரிவுத்துயர் பகிர்வு



### அமிர்தலிங்கம் செந்தூரன்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் செந்தூரன் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 12.15 மணிக்கு Hospital Lariboisiere Chambre Mortuaire 841, Boulevard De La Chapelle Paris 75010 France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### லியோனிஸ் பெலார்மின்

ஊர்காவற்றுறை நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Cergy Menucourt ஐ வசிப்பிடமாகவும் கொண்ட லியோனிஸ் பெலார்மின் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி 24 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு Eglise Bienheureux Fredenc Ozanam 8 Rue Phileas Fogg 95800 Cergy France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### கந்தையா தியாகராசா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Essen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராசா கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு Friedhof Hellweg 95, 45279 Essen (Steele), Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### மதீபன் சோதிலிங்கம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன் Soest ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மதீபன் சோதிலிங்கம் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு Osthofen Friedhof ,Nottebohm Weg 28, 59494 Soest என்னும் முகவரியில் நடைபெறும்.



### பிரகாசசிங்கம் கிரிஷான்

நோர்வே துரண்ணியத்தைப் பிறப்பிடமாகவும் நோர்வே Gryllefjord ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசசிங்கம் கிரிஷான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு Gryllefjord Kapell ,9379 Gryllefjord , Norway என்னும் முகவரியில் நடைபெறும்.



### பீற்றர் அழகேந்திரன் பஸ்ரியன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bremen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் அழகேந்திரன் பஸ்ரியன் கடந்த12 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு Friedhof Huckelriede, Habenhauser Landstra Be 70, 28277, Bremen, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி அருளானந்தம் புஸ்பவதி

வண்ணார்பண்ணை கொல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் புஸ்பவதி கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# ஆட்சியாளரின் அழுத்தம் காரணமாக யுத்த நகர்வில் பாதிப்பு ஏற்பட்டது

## முன்னாள் இராணுவ தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல்வாதிகளினால் போர் வெற்றி ஈட்டப்படவில்லை எனவும் ஆயிரக்கணக்கான படைவீரர்களினாலேயே போர் வென்றெடுக்கப்பட்டது என்றும் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாஹாகொல பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலநது கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 2009ஆம் ஆண்டின் முதல் நான்கரை மாதங்களிலேயே உச்சக்கட்ட போர் இடம்பெற்றது.

அந்தக் காலத்தில் ஐரோப்பாவின் அழுத்தம் காரணமாக போர் நிறுத்தமொன்றை அமுல்படுத்துமாறு ஆட்சியாளர் கோரினார்.

இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பிரபாகரன் தப்பிச் சென்றிருப்பார்.

போர் நிறுத்த யோசனையை நான் நிராகரித்தேன், படைவீரர்களும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

கடந்த 2009 ஆம் ஆண்டு சுதந்திர தினமன்று ஆட்சியாளர் போர்க்கள விடயங்கள் பற்றி பெருமிதத்துடன் உரையாற்றினார். எனினும், எனது தலை நெருப்புப் பற்றிக் கொண்டது.

ஆட்சியாளரின் அழுத்தம் காரணமாக எமது முன்னகர்வுகளில் பாதிப்பு ஏற்பட்டது.

புலிகள் மீளவும் பலமடைய ஆரம்பித்திருந்த காலமது. எவ்வாறெனினும், அனைத்து படையினரதும் அர்ப்பணிப்பு காரணமாக போரை வெற்றிகொள்ள முடிந்தது.

ஆட்சியாளரின் உத்தரவிற்கு அமைய 3 கிலோ மீற்றர் பின் நகர்ந்திருந்தால் பிரபாகரன் தப்பிச் சென்றிருப்பார்.

மக்கள் அன்றாடம் மூன்று வேளை உணவு உட்கொள்ள முடியாது அவதியுறும் நிலையில் அரசாங்கம் ஆசியாவின் ஆச்சரியம் பற்றி பேசுகின்றது.

நாட்டில் எரிபொருள் வளம் காணப்படுவதாக ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

பாலியல் வன்கொடுமை, சூதாட்டத்தில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் அரசாங்கம், மஞ்சள் கடவையில் பாதையை கடக்காத அப்பாவி பொது மக்களை சூதாட்டத்தின் முன் நிறுத்தி [illegible] என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

# மன்னிப்புக்கோரினார் வேட்பாளர் கம்மன்பில

மேல் மாகாண சபையில் போட்டியிடும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் உதய கம்மன்பில தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

தேர்தல் பிரசார ஆரம்ப நிகழ்வுகளில் அரச அதிகாரியான பாதுகாப்புச் செயலாளரை பங்கேற்கச் செய்தமைக்காக அவர் இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் உதய கம்மன்பில மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்புச் செயலாளர் பதவியானது ஓர் அரசியல் ரீதியான நியமனமாகும் எனவே, அரசியல் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான சகல உரிமையும் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு காணப்படுகின்றது.

எனினும், தேர்தல் ஆணையாளர் இதனை தேர்தல் விதி மீறலாகக் கருதுவதாகவும் இதனால் தாம் மன்னிப்பு கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.1978ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அமைச்சின் செயலாளர்கள் அரசாங்க அதிகாரிகள் அல்ல. எனவே, அமைச்சின் செயலாளர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க முடியாது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பாதுகாப்புச் செயலாளரை ஈடுபடுத்தியமை தவறு என தேர்தல் ஆணையாளர் கருதுவதாகவும் இதனால் தாம் மன்னிப்பு கோரியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கசினோ சூதாட்ட நிலையங்களை அமைக்க வேண்டுமென கோத்தபாய ராஜபக்ஷ கருதவில்லை.

சட்டத்தரணியும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான ஸ்ரீநாத் பெரேரா, உதய கம்மன்பில மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் நடவடிக்கைகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (அ-2)

# பொதுக்கூட்டம்

வவுனியா பெரியதம்பனை கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பெரியதம்பனை பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செட்டிகுளம் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக் கூட்டத்தில் சகல பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு கிராமசேவகர் போல் நேசராஜா கேட்டுள்ளார். (அ-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உக்ரைனில் அரசு படையினருக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தலைநகர் கிவ்வில் உள்ள சுதந்திர சதுக்கத்தை கைப்பற்ற சுமார் 20 ஆயிரம் பேர் திரண்டு சென்றனர். அவர்களை தடுக்க முயன்ற பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் நேற்று பெரியளவில் மோதல் தொடங்கியது.

ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் கலைந்துபோக வைக்கமுயற்சித்தனர். பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது பெற்றோல் குண்டுகளை வீசி ஆவேச தாக்குதல் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலால் நகரில் உள்ள பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கலவரத்தில் 7 பொலிஸார் உள்ளிட்ட 21 பேர் பலியாகியுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த கலவரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என கூறப்படுகிறது.

## விமானம் விபத்து; 18 பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாள் ஏர்லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த டுவின் ஆட்டர் விமானம் ஒன்று 15 பயணிகளுடனும் 3 ஊழியரகளுடனும் புகாரா விமான நிலையத்தில் இருந்து அண்மையில் புறப்பட்டது.

புறப்பட்ட 15 நிமிடத்தில் அதன் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டது.

நேபாளின் வடக்குப் பகுதியிலுள்ள பிரபலமான சுற்றுலா தலத்திற்கு சென்று கொண்டிருந்த இந்த விமானத்தில் ஒரு குழந்தை உட்பட 14 நேபாளிகளும் டென்மார்க் பயணி ஒருவரும் இருந்தனர்.

அதன்பின்னர் இந்த விபத்து குறித்த தேடுதல் வேட்டையில் அந்த விமானம் அர்ககாஞ்சி மாவட்டத்தில் உள்ள கிடிம் காட்டுப்பகுதியில் நொறுங்கிக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தில் இராணுவ மற்றும் சிவில் ஹெலிகொப்டர்கள் மீட்பு நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளன. அங்கு தீப்பிழம்புகளின் அடையாளங்கள் காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

நேபாள் விமானங்கள் பாதுகாப்பான பயணத்திற்கு உகந்தவை அல்ல என்று கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம ஐரோப்பிய யூனியன் தடை விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# தாய்லாந்து போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே துப்பாக்கிச் சூடு

## பிரதமருக்கு நெருக்கடி முற்றுகிறது

**(பாங்கொக்) தாய்லாந்தில் அரசு கட்டடங்களை மீட்கும் முயற்சியில் போராட்டக்காரர்களுடன் ஏற்பட்ட மோதலில் பொலிஸார் உட்பட 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 17 பொலிஸார் மற்றும் வெளிநாட்டு செய்தியாளர் உட்பட 59 பேர் காயமடைந்தனர்.**


தாய்லாந்து பிரதமர் யிங்லக் ஷினவத்ராவை பதவி விலகக்கோரி பல மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது. தலைநகர் பாங்கொக்கில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு அரசாங்க பணிகளை முடக்குகிறார்கள்.

இந்த போராட்டங்களை மீறி சமீபத்தில் தேர்தல் நடந்தா லும் இன்னும் முடிவுகள் வெளியிடப்படாமல் இருக்கிறது.

இதற்கிடையில் பாங்கொக நகரில் கடந்த திங்கட்கிழமையன்று புதிய போராட்டம் தொடங்கியது.

பிரதமர் அலுவலகம் உட் பட முக்கிய அலுவல கத்துக்கு செல்லும்நுழைவு வாயில் முன் சுவர்





அமைத்து தடுப்பு ஏற்படுத்தினர். இதனால பொதுமக்கள் யாரும் அரசு அலுவலகத்துக்கு செல்ல முடிய வில்லை. பாங்கொக் நகரில் வீதிகளில் நேற்று முன் தினம் 6 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனவே, போராட்டக்காரர்களை அகற்றும் பணியில நேற்று முன்தினம் பொலிஸார் இறங்கினர்.

அப்போது 2 தரப்பினர் இடையே பயங்கர மோதல் வெடித்தது. 200 மீற்றர் இடைவெளியில் நின்று பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளையும், றப்பர் குண்டுகளால் வானத்தை நோக்கியும் சுட்டு கூட்டத்தை கலைக்க முயன்றனர்.

அதே நேரத்தில் போராட்டக்காரர்களும் எதிர் தாக்குதலில் ஈடுபட்டனர். பொலிஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டும், நாட்டு வெடிகுண்டுகளை வீசினார்கள்.

சுமார் 20 நிமிட நேரம் அந்த பகுதி போர்க் களம் போல காட்சியளித்தது.

இத்தாக்குதலில் 17 பொலிஸ அதிகாரிகள் உடபட 59 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக வைத்தய சாலையில் அனு மதிக்கப்பட்டனர்.

**பிரதமருக்கு நெருக்கடி**

இந்த போராட்டத்துடன் பிரதமருக்கு எதிராக நெல் பயிரிடும் விவசாயிகளும் மானியம் வழங்க வலியு றுத்தி ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில இலஞ்ச ஒழிப்பு கமிஷனும் வழக்குப்பதிவு செய்து நட வடிக்கை எடுக்க இருப்பதாக கூறி இருக்கிறது.

எனவே, பிரதமர் யிங் லக் ஷினவத்ராவுக்கு தற்போது நெருக் கடி முற்றுகிறது. (2)

# கேளிக்கை விடுதி சுவர் இடிந்தது

## 10 மாணவர்கள் உயிரிழப்பு

தென்கொரியாவில் பல்கலைக் கழக புதிய மாணவர்கள் வரவேற்பு விழா நடைபெற்ற அரங்கத்தின் சுவர் இடிந்து விழுந்ததில் 10 பேர் உயிரிழந்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

தென்கொரியாவின் புஸான் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு ஆய்வுகள் தொடர்பான படிப்பில் சேர்ந்துள்ள புதிய மாணவர்களுக்கான இரு நாட்கள் வரவேற்பு விழா, ஜியோங்ஜு" .நகரில் உள்ள ஒரு கேளிக்கை விடுதி அரங்கில் நடைபெற்றது. விழாவில் 560 மாணவர்கள் கலந்து கொண்டனர். தற்போது கடும் பனிப்பொழிவுடன், மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக அரங்கத்தின் மேற்கூரையில் பனி மற்றும் தண்ணீர் தேங்கி இருந்தது.

இது மேற்கூரையில் ஏற்பட்டிருந்த விரிசல் வழியாக புகுந்ததில், அது இடிந்து விழுந்தது. அதன் இடிபாடுகளில் சிக்கி 10 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (2)

# 23 இராணுவ வீரர்களின் தலைகள்- தலிபான்கள் துண்டிப்பு

## பேச்சுவார்த்தை நிறுத்தம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் எல்லையில் இருந்து தலிபான்களால் கடத்தப்பட்ட இராணுவ வீரர்கள் 23 பேரின் தலையை தலிபான்கள் துண்டித்தனர்.

இதனையடுத்து தலிபான்களோடு பேச்சுவார்த்தையை இரத்து செய்வதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. தலிபான்களோடு கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் அரசின் குழுவினர் இரகசிய இடத்தில் அமைதி பேச்சு வார்த்தை நடத்தி வந்தனர்.



ஆனாலும் தலிபான் தரப்பில் தொடர்ந்து தாக்குதல் சம்பவங்களும், வன்முறை சம்பவங்களும நிகழ்த்தப்பட்டு வந்தன. இந்நிலையில் இரு தினங்களுக்கு முன்னர் தலிபானின் ஆதரவு அமைப்பான மொகந்த் ஏஜென்சி என்ற அமைப்பு வீடியோ டேப் ஒன்றை வெளியிட்டது. அதில் கடந்த 2010ஆம் ஆண்டு 23 இராணுவ வீரர்களை தலிபான் தீவிரவாதிகள் கடத்தி சென்றதாக தெரிவிக் கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் தெஹ்ரிக் இதலிபான் அமைப்பின் சார்பில் உருது மொழியில் எழுதப்பட்ட ஒருபக்க அறிக்கை ஒன்று வெளியானது.

அந்த அறிக்கையில் எல்லை பகுதியில்இருந்து கடத்தி கொண்டு செல்லப்பட்ட 23 இராணுவ வீரர்களையும் பழிக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக தலை துண்டித்து கொன்று விட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் பாகிஸ்தான் அதிர்ச்சி அடைந்துள்ளது. இது தொடர்பாக பாக். பிரதமர் நவூாஸ் செரிப் கூறுகையில், இதுபோன்ற இரத்த வெறி பிடித்த செயல்களுக்கு ஆதரவளிக்க முடியாது. இது அமைதி பேச்சுவார்த்தையை சீர்குலைக்க நினைக்கும் முயற்சியாகும்.

தலிபான்களின் இந்த நடவடிக்கை அரசியல் நேர்மையற்ற ஒன்றாகும் என்று கண்டனம் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவனுக்கு அருள்வாய்-நன்னெஞ்சே!
பகைவனுக்கு அருள்வாய்!
-பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மன்னித்தல் மாபெரும் மனிதநேயம் என்பதை நிரூபித்த தீர்ப்பு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்த சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்டிருந்த தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை நேற்று முன்தினம் சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியது.

ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் மேற்குறித்த மூவருக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டதிலிருந்து தமிழ் உலகம் முழுவதும் பதைபதைப்பு ஏற்பட்டிருந்தது.

தூக்குத் தண்டனையில் இருந்து இவர்களைக் காப்பாற்ற முடியாதா? என்ற ஏக்கத்தின் மத்தியில் தமிழக மக்கள், தமிழகத்தின் வழக்கறிஞர்கள் எனப் பலரும் தூக்குத் தண்டனையை நிறுத்தி விடுவதற்காகக் கடும்பாடுபட்டனர்.

கூடவே முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு தூக்குத் தண்டனை வழங்குவதை கடுமையாக எதிர்த்தது.

ஒட்டுமொத்தத்தில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து மனிதாபிமானத்தின் பெயரால் அந்த மூவரின் மரண தண்டனையையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்க எடுத்த முயற்சி வெற்றியளித்தது.

அதேநேரம் இத்தகைய வெற்றி என்பது மன்னித்தல்- மனிதநேயம் என்ற மானிடத்தின் உயர் குணப்பண்புகளால் ஏற்பட்டதேயன்றி இதற்கு யாரேனும் எதிர்மறையான வியாக்கியானம் செய்து விடக்கூடாது.

அதாவது கொலைக்குற்றம் சாட்டப்பட்டாலும் சட்டம் நம்மைப் பாதுகாக்கும் என்ற ஒரு தவறான கருத்தை எவரும் கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறான மனநிலை ஏற்படுத்தப்படுமாயின் உலகில் குற்றச் செயல்கள் தலைவிரித்தாடும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே, ராஜீவ் காந்தியின் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பானது, இந்த உலகிற்கு மன்னித்தல் என்ற ஒரு பெரும் மனிதநேயத்தின் உன்னதத்தை மீளவும் வலியுறுத்தியுள்ளது.

இந்திய தேசபிதா அண்ணல் காந்தியடிகளை கோட்சே என்பவன் சுட்டுக் கொல்கின்றான். கோட்சேயின் துப்பாக்கி ரவைகள் காந்தியின் உடலைப் பதம் பார்த்த போதிலும்- தன் உயிர்பிரியப் போகின்றது என்ற நிலையிலும் தன்னைச் சுட்டவனுக்கு எதுவும் செய்து விடாதீர்கள் என்று காந்தியடிகள் கூறிய வார்த்தைகள் கொலை என்ற கொடூரத்தை உலகில் இருந்து இல்லாதொழிப்பதற்கான பாவமன்னிப்பாகும்.

இதுபோல, சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தண்டனைக் குறைப்பும் கொலைப் பாவங்கள் புரிவதைத் தடுக்கும் அருமந்த தீர்ப்பாகும். அந்த வகையில் மனித சமூகம் சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை இருகரம் கூப்பி வரவேற்கும் என்பது சர்வ நிச்சயம்.

தொடர்ந்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்ட சபையில் விடுத்த அறிவிப்பு நிஜமாகும் போது மன்னித்தலிலும் உயர்ந்த பண்பொன்று மானிடத்திற்குத் தரப்படும்.

# சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கட்டுரை மற்றும் சித்திர போட்டிகள்

பல்வகைமையின் சமத்துவத்தின் ஊடாக அலங்கரிக்கப்பட்ட இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்காக பாடசாலை மாணவர்களுக்கிடையே நாடளாவிய ரீதியில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளை நடத்துவதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தற்பொழுது சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் உரிய பாடசாலை அதிபர்களுக்கு தெரியப்படுத்தி மாணவர்களை பங்குபெறச் செய்யுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பல்வகைமையின் சமத்துவத்தின் ஊடாக அலங்கரிக்கப்பட்ட இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவோம் என்னும் தலைப்பில் போட்டிக்கான ஆக்கங்கள் அமைக்கப்படவேண்டும்.

முதலாம் பிரிவில் 6 ஆம் தரம் தொடக்கம் 9 ஆம் தரம் வரையான மாணவர்கள் பங்குகொள்ளலாம்.

இரண்டாம் பிரிவில் 10ஆம் தரம் தொடக்கம் 13ஆம் தரம் வரையான மாணவர்கள் பங்குகொள்ளலாம்.

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டும் நடைபெறும் இப் போட்டியில் சித்திரப்போட்டிக்கு 18'×14' அளவிலான வெள்ளைத்தாளை மட் டும் பயன்படுத்தி விரும்பிய நிறங்களை பாவித்து வரைதல் வேண்டும்.

கட்டுரைகளை முதலாம் பிரிவு மாணவர்கள் 1000 தொடக்கம் 1200 சொற்களுக்கு குறையாமலும் இரண்டாம் பிரிவு மாணவர்கள் 1500 தொடக்கம் 2000 சொற்களுக்கு குறையாமலும் வரை தல் வேண்டும்.

ஆக்கங்களை அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மூலையில் போட்டியில் பங்குகொள்ளும் மாகாணம் மற்றும் பங்குகொள்ளும் போட்டி (சித்திரப்போட்டி அல்லது கட்டுரைப் போட்டி என்று) குறிப்பிடல் வேண்டும்.

சித்திரம் மற்றும் கட்டுரை ஆக்கங்களின் பின் பக்கத்தில் போட்டியாளரின் பெயர், வகுப்பு, பாடசாலையின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம், பாடசாலை அமைவிட மாகாணம், தனிப்பட்ட முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும் சித்திரம் மற்றும் கட்டுரை தங்களது சுய ஆக்கம் என்பதை வகுப்பாசிரியர் மற்றும் அதிபர் (இறப்பர் முத்திரையுடன்) உறுதிப்படுத்துதல் வேண்டும்.

இவ் ஆக்கங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, இல 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா, 7ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம்ரூபாவும் எனமுறையேவழங்கப்படுவதுடன் பத்தாம் இடம்வரை சகல வெற்றி யாளர்களுக்கும் பெறுமதிமிக்க சான்றி தழ் வழங்கப்படும்.

அகில இலங்கை ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு 20ஆயிரம் ரூபாவும் 15 ஆயிரம் ரூபாவும் 10 ஆயிரம் ரூபாவும் என முறையே வழங்கப்படுவதுடன் பத்தாம் இடம்வரை சகல வெற்றி யாளர்களுக்கும் பெறுமதிமிக்க சான்றி தழ் வழங்கப்படும்.

வெற்றியாளர்களை தெரிவு செய்யும் போது,

இலங்கை தேசத்தவர்களை கட்டியெழுப்புவதில் சமூகத்திற்கு கிடைக்கும் சாதக, பாதகங்கள் அவ்வாறான சாதக பாதகங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன?

தனது தேசியம், இனம், மதம், மொழியைப்போன்று ஏனைய தேசியம், இனம், மொழி மற்றும் மதத்திற்கும் அதன் கலாசாரத்தினையும் எவ்வாறு நேசிக்கலாம்? அதனை எவ்வாறு செய்யமுடியும்? இதனை மேற்கொள்ளாது இலங்கைத் தேசத் தைக் கட்டியெழுப்பமுடியுமா?

பல்வகைமையின் சமத்துவத்தின் ஊடாக அலங்கரிக்கப்பட்ட இலங்கை தேசத்தை எவ்வாறு கட்டியெழுப்புவது? கட்டியெழுப்பமுடியுமா?

பல்வகைமையின் சமத்துவத்தின் ஊடாக அலங்கரிக்கப்பட்ட இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவது இளஞ் சார்ந்த அல்லது மத முரண்பாடுகள் இன்றிய நிலைபேறான சமாதானத்திற்கான வழியாகுமா?

இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக சகல பிரஜைகளுக்கும் அனைத்து மொழிகளிலும் கதைப்பதற்கு மற்றும் புரிந்துணர்வினை ஏற்படுத்தும் ஆற்றல் என்பவற்றை கவனத்திற் கொள்ளும் விதம் போன்ற விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(சாவகச்சேரி)

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் வே. கந்தசாமி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சர்வேஸ்வரன், அழகியற்றுறை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.கைலைநாதன், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் அபிமானிகளான திரு.திருமதி சிவநேசன் தம்பதியினர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-29)

✪ ✪ ✪ ✪ ✪

(யாழ்ப்பாணம்)

யா/வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் வித்தியாலய அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கு.சிவகுமார், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி வட்டுக்கோட்டை முகாமையாளர் வே.புவனேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வட்டு. தெற்கு ஜே/165 கிராம உத்தியோகத்தர் செ.சிவபாலன், வட்டு. தெற்கு ஜே/165 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.குமணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வேலணை கிழக்கு மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி சுதாத்மிகா சிவகுமார் வழங்கி வைப்பார். (அ-2)

✪ ✪ ✪ ✪ ✪

(யாழ்ப்பாணம்)

யா/புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.தியாகராஜா, யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

## சத்திய தரிசனம்



இறைவனை நாம் எவ்வாறு வழிபடுவது? அவரை நாம் நமது ஆத்மாவாகவே வழிபடவேண்டும். கடவுள் நம்மை விட்டு வேறானவர் என்ற எண்ணத்தை விட்டு விட வேண் டும். மனித இருதயத்தை விட மிகவும் நேசிக்கக்கூடிய கோயில் எதுவும் கடவுளுக்கு கிடையாது. இதயக் கோயிலை மிகவும் நேசிக்கிறான் இறைவன். இதுதான் அவரது உண்மையான இருப்பிடம். நம்முள்ளே தேடாமல் இறைவனை எங்கோ வெளியிடத்தில் தேடக்கூடாது.

தெய்வீகத்தை அடைய நீங்கள் எவ்வித கடினமான ஆன்மீக சாதனைகளைச் செய்யத் தேவையில்லை. நீங்கள் உண்ணாமல் விரதம் இருப்பதோ எதுவும் தேவை இல்லை. அவர் மீது உங்கள் இதயத்தின் அடிப்பகுதியிலிருந்து அன்பு செலுத்துங்கள். பாவம் செய்யத் துணியாதீர்கள். சமுதாயத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு வளர உதவவேண்டும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தெரிந்து கொள்ளவேண்டியன

பனையோலைப் பாயில் படுத்து உறங்கினால் அதிக உஷ்ணம் மற்றும் பித்தம் உண்டாகும். கோரைப் பாயில் படுத்து உறங்கினால் உடற்சூடு தணிந்து குளிர்ச்சி உண்டாகும். சுகமான நித்திரை கிடைக்கும். இலவம் பஞ்சுப் படுக்கையில் படுத்தால் ஆரோக்கியம் கிடைக்கும். இரத்தவிருத்தி உண்டாகும். சனிபகவானுக்கு வீட்டில் எள் விளக்கு ஏற்றக்கூடாது.

வீட்டை விட்டுப் புறப்படும்போது சகுனம் சரியில்லை என்றால் திரும்பவும் வீட்டிற்குள் வந்து உட்கார்ந்து தண்ணீர் குடித்துவிட்டு மறுபடி புறப்படவும்.

மயானம் சென்றுவிட்டு வந்தோ அல்லது தலைமுடி வெட்டிக் கொண்ட அன்றோ எண்ணெய் தேய்த்துக்குளிக்கக்கூடாது. காலை வெயிலில் உடம்பு பட இருக்கக்கூடாது.

வீட்டில் அகத்தி,அலரி, முருக்கு, எருக்கு, பருத்தி, நந்தியாவட்டம், கருங்காலி, ஆல் போன்ற மரங்களை வளர்க்கவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி இளைஞர் கழக கரப்பந்து; நவஜீவன்ஸ், கருணாகரன் இறுதியாட்டத்திற்கு தகுதி





கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான விளையாட்டு விழா 2014 இன் கரப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் இமையாணன் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் ஆண்களிற்கான கரப்பந்தாட்ட போட்டியில் நவஜீவன்ஸ்,கருணாகரன் இளைஞர் கழக அணியினர் இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றனர்.முன்னர் நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் நவஜீவன்ஸ் இளைஞர் கழகம் வாலிபர்வட்டம் இளைஞர் கழக அணியை 2:0 என்ற நேர் செற்களில் வீழ்த்தி இறுதி ஆட்டத்தில் நுழைந்தது.

பரபரப்பான இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கருணாகரன் இளைஞர்கழக அணியை எதிர்த்து சிவகுமரன் இளைஞர் கழக அணி மோதியது .

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 2:1 என்ற செற்களில் சிவகுமரன் இளைஞர் கழகத்தை வீழ்த்தி இறுதி ஆட்டத்தில் நுழைந்தது கருணாகரன் இளைஞர்கழகம். மார்ச் மாதம் 9 ஆம் திகதி இடம்பெறும் பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வில் இவ் இறுதி போட்டி இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருமான கந்தசாமி சுசீந்திரன் கலந்து கொள்வார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை திருமதி ஜெயந்தி சுசீந்திரன் வழங்குவார். (க-23)

* * *

(பூநகரி)

கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை முதல்வர் நா.நடேசமூர்த்தி தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக பூநகரிக் கோட்ட கல்வி அலுவலர் சு.தர்மரத்தினமும் முழங்காவில் பங்குத் தந்தை ஆ.ஆனந்தகுமார் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-84)

# வட்டுக்கோட்டை வி.கழகத்தை வீழ்த்தி சங்கானை வை.எம்.எச்.ஏ.சம்பியன்

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சங்கானை வை. எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானை வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக்கழக மைதானதில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை வளையாட்டுக்கழக அணி மோதிக் கொணடது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அது 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அவேந்திரன் 20 ஓட்டங்களையும் சோபன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் சங்கானை வை. எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜெயந்தன் 4 இலக்குகளையும், யோகசாந்தன் 2 இலக்குகளையும் கபில், டிலக்சன், சாந்தன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

71 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சங்கானை வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக்கழக அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் டிலக்சன் 19 ஓட்டங்களையும், தர்சன் 21 ஓட்டங்களையும், யோகசாந் 2 ஓட்டங்களையும், சாந்தன் 6 ஓட்டங்களையும தமது அணிசார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 13 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜோதி, சோபன் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். சங்கானை வை. எம்.எச். ஏ.விளையாட்டுக்கழக அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது. (க-23)

# மின்னொளியிலான தாச்சிப் போட்டி

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகி இடம் பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் தாவடி காளியம்பாள் அணியும் ஆலடி சிந்து அணி யும் மோதின. இதில் 4:4 பழங்கள் அடிப்படையில் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. இதனையடுத்து இப்போட்டி இன்று மீண்டும் இடம்பெறவுள்ளது..இதேவேளை இப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இம் மாதம் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தாச்சி சங்க தலைவர் அறிவித்துள்ளார். (க-23)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# தலைவர் வெற்றிக்கிண்ணம்; விளான் அன்ரனீஸ் வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக் கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்ற அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன. போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் விளான் அன்ரனீஸ் அணியும் ஈவினை கலைமகள் அணியும் மோதியது. இதில் 1:1 என்னும் கோல் அடிப்படையில் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. இதனையடுத்து சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 4:3 என்னும் கோல் அடிப்படையில் விளான் அன்ரனீஸ் அணி வெற்றி பெற்றது. இன்று இடம்பெறவுள்ள போட்டியில பண்டத்தரிப்பு பிறைற்ஸ்ரார் அணியும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் மோதவுள்ளது.

மற்றைய போட்டியில் கல்வளை விநாயகர் அணியும் இடம்பெறும் சாவற்காடு மகாத்மா மற்றும் மாதகல் சென் தோமஸ் அணியும் மோதும் போட்டியில் வெல்லும் அணியும் மோதவுள்ளன. (க-23)

# நெல்லை பிளாஸ்ரர் கிரிக்கெட்; மாலுசந்தி மைக்கல் சம்பியன்



(கரவெட்டி)

பிபீலியனின் துடுப்பாட்டம் பிரசாந்தின் சகலதுறை ஆட்டம் மூலம் கொக்குவில் A,B அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது.

நெல்லியடி நெல்லை பிளாஸ்ரர் அணி யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 10 ஓவர்கள் 11 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கொலிங்ஸ்ரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் A,B விளை யாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அவ்வணி 8.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜனதாஸ் 35 ஓட்டங்களையும் ராகுலன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தினேஸ் 3 விக்கெட்டுக்களையும் தீபன், பிரசாந் தலா 2 விக்கெட்டுக்களையும் தர்சன் ஒரு விட்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 8 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையும் இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பிரசாந் 24, பபீலியன் 21, அமர்தன் 13, கோகுலன் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சரண் 3 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன், ஜனதாஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் அணியின் பிரசாந்தும் தொடர்நாயகனாக கொக்குவில் A,B அணியின் உத்தமகுமரனும் தெரிவாகினர். (க-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய கட்டளைத் தளபதி இன்று யாழிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய தெற்கு இராணுவத் கட்டளைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் அசோக் சிங் இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள அதேவேளை யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதியையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

யாழ்.பலாலி படைத்தலைமையகத்திற்கு இன்று காலை 8 மணியளவில் வருகைதரும் இந்திய இராணுவ கட்டளைத்தளபதியை யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா வரவேற்கவுள்ள அதேவேளை இராணுவத்தினரால் விசேட அணி வகுப்பு மரியாதையும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை பலாலி படைத் தலைமையகத்திலுள்ள இந்திய இராணுவத்தினரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## காணாமல் போன பெண் தொங்கிய நிலையில் மீட்பு

(மல்லாவி)

இரண்டு நாட்களுக்கு முன் காணாமல் போன குடும்பப் பெண் அவர் வீட்டின் பின் புறத்தில் தொலைவில் அமைந்துள்ள பற்றைக் காட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் மாந்தை கிழக்கு பிரதேச பிரிவில் உள்ள எரிவில் கிராமத்தை சேர்ந்த நாகராஜா தயாநிதி (வயது 25) என்ற இரண்டு பிள்ளையின் தாயாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த திங்கட்கிழமை காணாமல் போயிருந்தார். இந்நிலையில் இவர் நேற்றைய தினம் வீட்டின் பின் புறத்தில் உள்ள பற்றை காட்டில் மரத்தில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ மரணத்தில் மர்மம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-15)

# ஐ.நா செயலருடன் அமைச்சர் டலஸ் சந்திப்பு

இலங்கையின் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிற்கும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான கீ மூனுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயத்தில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய முனைப்புக்களில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு தொடர்பில் இந்த சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் விவகாரம் தொடர்பில் சர்வதேச நிகழ்ச்சி நிரல் ஒன்றை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச சவால்களில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு ஆகியன பற்றியும் பேசப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்த நிறைவின் பின்னர் சமாதானம் மற்றும் நல்லிணக்க முனைபபுக்களில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு குறித்து பான் கீ மூன் வலியுறுத்தியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மே மாதம் இலங்கையில் உலக இளைஞர் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமர்வுகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. (எ-11)

# 47 வெடி பொருட்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் பகுதியில் வெடிக்காத வெடி நிலையில் உள்ள 47 வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சேட் அமைப்பானது கிளிநொச்சியில் கரைச்சி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வவுனியா மாவட்டத்திலும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெவ்) நிதியுதவியுடன் மிதிவெடி அபாயக் கல்வியினை வழங்கி வருகின்றனர். குஞ்சுப்பரந்தன், கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மிதிவெடி அபாயக் கல்வியினை வழங்கிய பின்னர், பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் 47 வெடிக்காத வெடிநிலையில் உள்ள வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டு அவை இருக்கும் இடங்களில் சேட் அமைப்பினரால் அபாயப்பட்டி கட்டப்பட்டுள்ளது. இவ



ஆபத்தான பிரதேசம் ஹலோ மிதிவெடி அகற்றப்படும் அமைப்பினருக்கு அறிவித்து அகற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது போன்ற ஆபத்தான பொருட்கள் கரைச்சி, பூநகரி பிரதேசங்களில இருந்தால் சேட் அமைப்பினரைத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஜெயாவை சந்தித்தார் அற்புதம்மாள்

(சென்னை)

தனது மகன் பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளதற்கு, முதல்வர் ஜெயலலிதாவிடம் அற்புதம்மாள் நேரில் நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்தியில்,

முதல்வர் ஜெயலலிதாவை நேற்று தலைமைச் செயலகத்தில், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் சந்தித்து, பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுத்தமைக்காக, தனது நன்றிகளை கண்ணீர் மல்க தெரிவித்துக்கொண்டார்.

ஒரு அம்மாவின் உணர்வை புரிந்துகொண்டீர்கள் அம்மா. எனது மகன் என்னிடம் வந்து சேருவானா என்று பயந்திருந்தேன். அந்த பயம



இன்று போய்விட்டது அம்மா என்று நெஞ்சம் நெகிழ நன்றி கூறினார் என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாசாலை அதிபர் ப.சிவலோகநாத தேசிகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச சபை தலைவர் திருமதி நா.ஐங்கரன் கலந்து கொள்வார். (க)

## பாலைதீவு உற்சவம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 17-ம் திகதி முதல் 24-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவம் தொடர்பான முன ஆயத்த கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கிளி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உற்சவத்தோடு தொடர்புபட்ட அலுவலர்கள் அனைவரையும் இவ் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-84)

## கடலில் நின்ற குடும்பஸ்தர் மாரடைப்பால் மரணம்

(முல்லைத்தீவு)

கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முல்லைத்தீவு கடற்றொழிலாளியொருவர் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார்.

இதில் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று முள்ளியவளை மேற்கு மனவ குடும்பத்தினை சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராஜா (வயது 65) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

முள்ளியவளை கிழக்கு கடற்கரையில் நேற்று காலை 7.30 மணியளவில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சடலமானது முல்லைத்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-267)

## ஜெயலலிதா...

கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 பேரை விடுதலை செய்து முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் நேற்று அறிவித்தார்.

இதை, எதிர்க்கட்சி தலைவர்கள் பலரும் வரவேற்று பேசினர்.

ராஜீவ் காந்தி உட்பட 18 பேர் ஸ்ரீ பெரும்புதூரில் கொல்லப்பட்டார்கள். அந்த 18 பேருக்கு என்ன நியாயம் கிடைக்கும் என்று இதன் போது காங்கிரஸ் உறுப்பினர் ரங்கராஜன் கேள்வியெழுப்பினார்.

இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். (எ-11)

## மனித புதைகுழி...

பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 51 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் இன்று 27 ஆவது தடவையாக மன்னார் நீதவான் முன்னிலையில் குறித்த மனித புதைகுழி தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 25 வருடங்களாக...

அனைவருக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் மரண தண்டனையிலிருந்து தப்பியுள்ள சாந்தனை தான் கடந்த 25 ஆண்டுகளாகத் தொலைகாட்சியில் காட்டப்படும் அவரது புகைப்படத்தில் மட்டுமே பார்த்து வருவதாகவும் அவர் கூறினார்.

யாழ் மாவட்டம் உடுப்பிட்டியில் தற்போது தனது மற்ற பிள்ளைகளுடன் வசித்துவரும் மகேஸ்வரி அம்மையார், சாந்தன் தனது பள்ளிப படிப்பை முடித்தபிறகு தந்தையுடன் ஆலோசித்து வெளிநாடு செல்ல முயன்றார் என தெரிவித்தார். தனது கணவர் கடந்த ஆண்டு இறந்துவிட்டதால், சாந்தன் என்ன காரணத்திற்காக தமிழ்நாட்டுக்குச் சென்றார என்பது குறித்த முழுத் தகவல்களும் அவருக்கு மட்டுமே தெரியும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமரின் மரணத்தில் தனது மகனும் தொடர்புபட்டிருந்தார் எனும் தகவல் எனக்கு திடீரென்று தெரியவந்த போது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

ராஜீவ் கொலையுடன் தொடர்பா?

ராஜீவ் காந்தி கொலையுடன் அவர் எப்படி தொடர்புபட்டார் என்பதை இன்னும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கடந்த 25 ஆண்டுகளாக எனது மகனை நினைத்து பிரார்த்தனைகள் மற்றும் உபவாசங்களை கடைபிடித்து ஆலயங்களுக்கு செல்வதை மட்டுமே வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

இவ்விடுதலையை அறிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். எனது மகனை மீட்க நான் இந்தியா செல்லவுள்ளேன். உலகில் மரண தண்டனையைத் தான் எதிர்ப்பதாகவும் ஏனெனில் தான்பட்ட துன்பத்தை இனி யாருமே அனுபவிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இறைவனின் அருளால் மட்டுமே தனது மகனுக்கு சிறையிலிருந்து விடுதலை கிடைக்க வழி ஏற்படுமென என தொடர்ந்து நம்பி வந்தேன்.

பொருளாதார நெருக்கடி காரணமாக எங்களால் இந்தியா சென்று சாந்தனை பார்க்கக் கூடிய முடியவில்லை. சிறையில் இருபது வருடங்களுக்கும் மேலாக இருக்கும் அவருடன் கடிதத் தொடர்புகூட எமக்கோ, எமது குடும்ப உறுப்பினர்களுக்கோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தான் அறிந்தவரை சாந்தனுக்கு விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. யுத்தம் காரணமாக 1991-ம் ஆண்டு இலங்கையிலிருந்து படகு மூலம் இந்தியா சென்றார் என்று கூறிய அவர், கடந்த 25 ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் உட்பட எவரும் தங்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்றும் கூறினார்.

அதேபோல் இந்த வழக்கில் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டிருக்கும் மற்றொரு இலங்கைத் தமிழரான முருகன்குடும்பத்தாருடன் தமக் கோ தனது குடும்ப உறுப்பினர்களுக்கோ எவ்வித் தொடர்புகளும் இல்லை எனவும் தில்லையம்பலம் மகேஸ்வரி அம்மையார் தெரிவித்தார்.

வாழ்வில் தனக்கு இருக்கும் ஒரே ஆசை தனது மகன் சாந்தனை நேரில் சந்திக்க வேண்டும் என்பது மட்டுமே என்றும் அவர் தெரிவித்தார். (எ-24)

## ராஜீவ் கொலைக்...

ராஜீவ் காந்தி கொலைக் குற்றச் சாட்டில் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய மூன்று பேருக்கும் மரணதண்டனையை தவிர்த்து ஆயுள்தண்டனையாக குறைப்பதாக இந்திய உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்த சூழ்நிலையிலேயே இந்த மூன்று பேருடன் ஏற்கெனவே ஆயுள் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினி உள்ளிட்ட நால்வரையும் விடுதலை செய்துவிடு வதற்கு தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இவர்களின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசுக்கு 3 நாள் அவகாசம் அளிப்பதாகக் கூறிய ஜெயலலிதா, மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்களை தமிழக அரசே விடுதலை செய்யும் என்றும் சட்டமன்றத்தில் கூறினார்.

இது குறித்த அறிவிப்பினை நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் வெளியிட்ட முதல்வர் ஜெயலலிதா, "ஏழு பேரும் 23 ஆண்டுகளாக சிறைச்சாலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டு, குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 432-ல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முன்னதாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது" என்று கூறினார்.

### மத்திய அரசுக்கு அவகாசம்

சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோரது மரண தண்டனை நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தால் ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது.

அதேபோன்று முருகனின் மனைவி நளினியின் தண்டனையும் ஏற்கெனவே ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

தவிரவும் ரொபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ராஜீவ் கொலை வழக்கில முதலில் தடா நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தாலும், பின்னர் அது உச்ச நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இந்த ஏழுபேரையும் விடுதலை செய்வதென்று முடிவு செய்யப்பட்டுவிட்டாலும், ராஜீவ் கொலை வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பின் கண்காணிப்பில் நடத்தப்பட்டு தண்டனைகளும் வழங்கப்பட்ட நிலையில், குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 435-ன்படி, அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசு 3 நாட்களுக்குள் தமது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 7 பேரும் விடுவிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் கூறினார்.

அரசின் முடிவினை திமுக தலைவர் கருணாநிதி உள்ளிட்ட பலர் வரவேற்றிருக்கின்றனர்.

அடுத்துவரும் சில நாட்களில் ராஜீவ் காந்தி கொலை தண்டனைக கைதிகள் அனைவரும் விடுதலையாவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் கவனத்திற்கு வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவர்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் கவனத்தை வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் ஈர்த்துக்கொண்டது.

கடந்த 16ஆம் திகதி வெளிவந்த **உங்கள் மனச்சாட்சியைவிற்று விட்டு விசாரணையை நடத்தி விடாதீர்கள** என்ற ஆசிரியர் தலையங்கம் ஆணைக்குழுவின் மொழி பெயர்ப்பாளரும் ஓய்வுபெற்ற பாராளு மன்ற மொழிபெயர்ப்பாளருமாகிய கே.தாமோதரம்பிள்ளையினால் மொழிபெயர்க்கப்பட்டு ஆணைக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

ஆசிரியர் தலையங்கத்தை வாசித்தறிந்த ஆணைக்குழுவினர் தாம் நேர்மையுடனும் பக்கசார் பற்ற முறையிலும் செயற்படுவோம் என உறுதிமொழி அளித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ)

# ஐ.நா. அமர்வில் சர்வதேச விசா...

எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணை குறித்து பேசப்பட்டதா? என்று கேள்விஎழுப்பப்பட்டது. இதறகு பதிலளித்த முதலமைச்சர்,

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை கோருவதற்குரிய நடவடிக்கையை பிரிட்டிஷ் பிரதமர்டேவிட்கமரூன்மேற்கொண்டு வருகின்றார்.

சர்வதேச நாடுகள் தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அறிந்துள்ளது. இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அனைத்து விடயங்களையும் கணகாணித்துக் கொண்டிருக்கிறது என அந்த நாட்டின் தூதுவர் என்னிடம் தெரிவித்தார்.

வடக்குமாகாணத்தின்தற்போதைய நிலைமைகள் மற்றும் நடைமுறையில் என்ன நடைபெறுகின்றது என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே பிரிட்டன் தூதுவர் யாழிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதற்கமைய இன்று (நேற்று) இங்கு வருகை தந்த மேற்படி குழுவினர் மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடிய தன் பின்னராக என்னையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதில் ஆளுநருடனான சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவது தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடியதாகவும் இதற்கு ஆளுநர் ஒத்துழைப்பு வழங்குவதாக் தெரிவித்துள்ளதாகவும்என்னிடம்கூறியுள்ளனர். அத்தோடு இதனைப் பற்றிய என்னுடைய நிலைப்பாடு தொடர்பிலும் கேட்டனர்.

இதன்போது தனிப்பட்ட ரீதியில் எங்களுக்கிடையில் எந்தவிதமான பிரச்சினை யும் இல்லை. கடந்த சில தினங்களிற்கு முன்னரும் ஆளுநருடன் கதைத்திருக்கின்றேன். ஆனால் நிர்வாக ரீதியில் தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக பல சந்தர்ப்பங்களில் மாகாண சபையில் எங்களால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் முறியடிக்கப்படுகின்றன.

எங்களால் மேற்கொள்ளப்படுகினற நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தாமல் இத் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்பட்டு வருகின்ற நிலை இருக்கின்றது. இதனால் எமது வேலைகள் திட்டங்கள் தடைப்படுகிறது. இவ்வாறு நிர்வாக ரீதியாக பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது எங்களுடைய பணிகளைச் செய்ய முடியாத நிலை காணப்படு கின்றது.

அதாவது நாங்கள் சில நடவடிக்கைகளை தேவையின் நிமிர்த்தம் எடுக்கும் போது இதற்கு மாறாகவேறு ஏதும் நடவடிக்கையை எடுத்தால் எமது வேலை தடைப்படுகின்றது. இந்தப் பிரச்சினைதான் தொடர்ந்து இங்கு நடைபெற்று வருவதாக வும் தூதுவரிடம் எடுத்துக் கூறி யிருக்கினறேன்.

சர்வதேச விசாரணை குறித்து எதுவும் பேசப்பட வில்லை ஆனால் பிரிட்டிஷ் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தபோது எம்மிடம் கூறிய கூற்றுக்கு ஏற்ப அவர நடவடிக்கையை எடுத்து வருகின்றார் என்றும் எங் களுடைய மனதுக்கு சந்தோ சத்தை ஏற்படுத்தும் வகையிலையே தமது நாடு செயற பட்டு வருவதாகவும் அந்த நாட்டுத தூதுவர் கூறியதாக முதலமைச்சர்தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் எதிர கொண்ட, எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளினால்தான் உலகத்தில் எங்கேயோ இருக்கிற இந்தச் சிறிய மாகாண சபை இன்று முக்கியத்துவம் வாய்ந்திருக்கின்றது.

சர்வதேச நாடுகள் இங்கு நடக்கும் அனைத்து விடயங்களையும் தெரிந்து வைத் திருக்கினறது.

ஆகவே இங்கு என்ன நடக்கிறது என்று நாங்கள் அவர்களுக்கு கூறத் தேவையில்லை என்று முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-)

# மேல் நீதிமன்ற நீதிபதியாக இளஞ்செழியன் பதவி உயர்வு

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதியாக மா.இளஞ்செழியன் இன்று பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்கிறார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராகப் பதவி வகித்த மா.இளஞ்செழியன், 1999ஆம் ஆண்டில் செம்மணிப் புதைகுழி விசாரணைகளை முன்நின்று நடத்தியவர் என்பதும் அமெரிக்க நாட்டின் மனித உரிமைக்கான கௌரவத்தைப் பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட மா.இளஞ்செழியன் திரு.திருமதி.மாணிக்கவாசகர் தம்பதிகளின் புதல்வர் ஆவார். (ந)

# ஈழத் தமிழர்...

விக்னேஸ்வரன் இங்கும் நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்ற அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் கொலை வழக்கிலிருந்து சாந்தன், முருகன், பேரறிவாளன் மற்றும் நளினி உள்ளிட்ட ஏழு பேரும் விடுவிக்கப்பட்டுள்ளமையை வரவேற்பதுடன் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கின்றது. இதே போன்று அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மேலும் மகிழ்ச்சியானதாகவே அமையுமென நினைக்கிறேன்.

நான் நீதிபதியாவிருந்த காலத்திலும் பலரை சிறைக்கு அனுப்பியிருக்கின்றேன். அவ்வாறு சிறைக்கு அனுப்பியவர்கள் விடுதலையாகும் போது அவர்களைச் சந்தித்தும் கலந்துரையாடியிருக்கின்றேன். அப்போது அவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள்.

மேலும், இந்தியச்சிறையிலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட ஏழுபேர் விடுவிக்கப்பட்டுள்ளது போன்று இலங்கை சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப் பட வேண்டும்.

குறிப்பாக நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம்ஆகவே அவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டு மென முதலமைச் சர் மேலும தெரிவித்தார். (எ-6)

# ராஜீவ்காந்தியின் கொலைக்...

நளினி, றொபேட் பயஸ் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய முடிவு செய்துள்ளதாக தமிழக அரசு நேற்று அறிவித்தது.

தமிழக அரசின் இந்த முடிவிற்கு காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவரும் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகனுமான ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது இந்த தேசம் தொடர்புடைய விவகாரம். இது என் தந்தை தொடர்புடைய விவகாரம் அல்ல. ஒரு முனனாள் பிரதமரை கொன்ற குற்றவாளிகளே விடுதலையானால் பொது மக்களின் நிலைமை என்ன ஆவது என்று கூறியுள்ளார் ராகுல் காந்தி.

செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது உச்ச நீதிமன்றத்தின் முடிவு. நான் மகிழ்ச்சியாகவும் இல்லை வருத்தமாகவும் இல்லை.

ஏனெனில் எங்களின் வருத்தம் இந்த சமீபத்திய சம்பவங்ளினால் எழவிலலை.

ராஜீவ்காந்தி கொடிய முறையில் கொல்லப்பட்டபோது எங்களின் வருத்தம் எழுந்தது. அது இன்று வரை இருந்து கொண்டே தான் இருக்கும் என்று சிதம்பரம் கூறியுள்ளார். (எ-11)

ராகுல் காந்தியின் இந்த கருத்திறகு காங்கிரஸ்கட்சியின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் கமல் உநாத் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்தியபாராளுமன்றத்தைத் தாக்கிய பயங்கரவாதி அப்சல் குரு வுக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்ற காலம் தாழ்த்தப் பட்டபோது காங்கிரஸ் அரசு தீவிரவாதத்தை ஒடுக்குவதில் உரிய நடவடிக்கை எடுக்க வல்லை என்று விமர்சித்த பாஜக, தற்போது மௌனம் காப்பதாக தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் கபில் சிபல் விமர்சித்தார்.

ராஜீவ் காந்தியை இழந்த வருத்தம் இன்னும் இருந்தாலும் குற்றவாளிகள் விடுவிக்கப் படுவது குறித்து எந்தக் கருத்தும்இல்லை எனறு மத்திய நிதித் துறை அமைச்சர் ப.சிதம்பரம


## கடை வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் 100 அடி நீளமான கடை வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :- 078 913 3712

2 மணித்தியாலத்தில்

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair

## நிரந்தர தொழில்வாய்ப்புகள்

வாழ்க்கை வருமானத்தை சமாளிக்க நிரந்தர தொழில்வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ கோடியல் / பிஸ்கட் / சொக்லட் / கோழி இறைச்சி / காமெண்ட் / PVC / கிளவுஸ் / புத்தகம் / தண்ணீர் போத்தல் / பெயின்ட் / பிளாஸ்டிக் மற்றும் பல தொழிற்சாலைகளில் * உற்பத்தி *லேபல் *தரம்பிரித்தல் பொதியிடல் பிரிவுக்கு 18-50 வயது ஆண் - பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். (நண்பர்கள் + குழுக்களாக ஒரே தொழிற்சாலைகளில்) சம்பளம் 18000/- 25000/- 32000/- வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்புக்கள்.

தொடர்பு : 0775561883

## வேலைவாய்ப்பு

எமது கம்பனியில் சம்பாதிக்க ஆர்வமுள்ள விற்பனை பிரதிநிதிகள் தேவை. ஆர்வமும், துடிப்பும், தன்னம்பிக்கையும் கொண்டவர்கள் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

- பயிற்சி வழங்கப்படும்
- அனுபவம் அவசியமற்றது
- தங்குமிடம்&உணவு வசதிகள் இலவசம்
- வயதெல்லை 18- 35
- வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு
- இருபாலாரும்இணைந்துகொள்ளலாம்
- அடிப்படை சம்பளம் 15,000 - 18,000

தொடர்புகளுக்கு:

0770771377, 0778979797

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா

19000 /- 0777 590 792

## பசுவைக் காணவில்லை

வெள்ளையில் சந்தனக் கலர் கலந்த டாப்பர் இன. 800kg-900kg எடை யுள்ள, பெரிய அகன்ற கொம்பு, K.S என்ற குறியுடைய, 4 3/4 அடி உயரமுள்ள, கழுத்தில் துணி பின்னிக் கட்டியுள்ள, கன்று போடும் தறுவாயில் இருந்த பசுவை கடந்த புதன் கிழமையில் இருந்து (12.02.2014) காணவில்லை, இது ஒவ்வொரு கடை, வீதி வழியாக செல்லும் பசுவாகும். பசுவையும், கன்றையும் கண்டால் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

இ.பஞ்சலிங்கம் 077 530 2627
பண்டாரக்குளப்பிள்ளையார் கோவில்,
அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்,
அரசவீதி, நல்லூர்.


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாஜனி விசுவலிங்கம்



சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பத்மாஜனி விசுவலிங்கம் (18.02.2014) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற முன்னாள் கல்வி ஆலோசகர் ச.விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், சாரதா, பிரபாகரன், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் கிருபாகரன், சுபத்திரா, சுஜந்தா ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
0782792948

தகவல் : திருமதி சூ.சுபத்திரா (மகள்)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org